செங்குந்த மித்திரன்

மலர்:21 இதழ்: 6 | ஜூன் – 2021 | Date of Publication 25th day of Every month | தனிப்பிரதி விலை: ₹ 15/–

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் இரண்டாவது தலைவர்

திரு.ஆ.வே.முத்தைய முதலியார்

புதுவை பிரெஞ்ச் அரசாங்கத்தின் இந்திய அமைச்சர்

வாழ்க வாழ்க செங்குந்தர்!
வெல்க வெல்க செங்குந்தம்!!

செங்குந்தர் உறுதிமொழி

பினாங்கு
அருள்மிகு தண்டாயுதபாணி

நாம் செங்குந்த குலக்கடவுள்
அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக,
மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு
உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.

2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.

3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.

4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.

5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

தலைவர் மடல்

எந்தக் காலத்திலும் நேர்மையையும், வாய்மையையும் தவறாமல் கடைப்பிடித்து கண்ணியத்தோடு வாழ்ந்து வரும் செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

நேசிப்பவர்கள் எல்லாம் நம்மோடு இருந்துவிட்டால் நினைவின் மொழியும், பிரிவின் வலியும் தெரிய முடியாமல் போய்விடும்.

இந்த கொரோனா காலத்தில் பல்வேறு உறவுகளையும், நண்பர்களையும் நாம் பிரிந்துவிட்டோம். இனி இதுபோன்று நிகழாமல் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நமது கையில்தான் உள்ளது.

ஜூலை 9 அன்று காஞ்சி ஸ்ரீ நாகலிங்க முனிவர் மற்றும் ஜூலை 17 அன்று திரு. கா.அ.சண்முக செங்குந்தர் ஆகியோரது நினைவு நாளை நம் இல்லங்களிலிருந்து நினைவு கூர்வோமாக!

வாழ்க்கையில் முன்னேறியவர்கள் யாரும் அடுத்தவர் மீது புகார் சொல்லிக் கொண்டிருப்பதில்லை...

யார் முன்னேறுகின்றார்களோ அவர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்தி செயலாற்றி, வாழ்க்கையின் உயரத்திற்கு சென்றுகொண்டிருக்கிறார்கள்.

போதித்தால் புரியாதது..
பாதித்தால் புரியும்..

அன்புடன்

KPK செல்வராஜ்

புதுக்கோட்டை திருகோகர்ணம் பிரகதாம்பாள் (எ) அரைக்காசு அம்மன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழைமை கொண்டது திருக்கோகர்ண ஆலயம். இந்த ஆலயத்தில் ஈசனோடு இருந்து அருள் செய்பவளே பிரகதாம்பாள். பிரகதாம்பாள்தான் மக்களால் அரைக்காசு அம்மனாக உருமாறி நமக்கு அருள்புரிந்து கொண்டு இருக்கிறாள். இவளின் உருவம் பொறித்த காசினை பூஜை அறையில் வைத்து வழிபட்டால் செல்வ வளம் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

புதுக்கோட்டை மாநகரின் மத்தியில் அமைந்துள்ள மகேந்திரவர்ம பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட மலை குகை கோவில் திருக்கோகரணீஸ்வரர் கோவில் ஆகும். இங்குள்ள மூலவர் கோகரணீஸ்வரர் தேவியர் பிரகதாம்பாள்,

தொண்டைமான் வம்சத்ினர் ஆட்சியின் போது இங்கு சித்திரை பெருவிழா, ஆடிபூரம் மற்றும் நவராத்திரி விழா ஆகியவை மிகவும் சிறப்பாக நடைபெறும். பிற்காலத்தில் பாண்டியர் சோழர்கள் மற்றும் தொண்டைமான் அரச வம்சங்களும் சில பகுதிகளை கட்டமைத்து பெரிய கோவிலாக பரிமளிக்க செய்துள்ளனர்.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சமஸ்தானம் புதுக்கோட்டை சமஸ்தானம். இந்த சமஸ்தான மன்னர்களின் குலதெய்வமாக இருப்பவள் திருக்கோகர்ணம் பிரகதாம்பாள்.

இந்த தேவியைப் போற்ற புதுக்கோட்டை சமஸ்தானம் இவளின் திருவுருவம் பொறித்த

திருகோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் (எ) அரைக்காசு அம்மன்

அருள்மிகு அம்மை அப்பர்

காசினை வெளியிட்டது. அரைப்பணம் என்ற மதிப்பில் அம்மனின் திருவுருவம் வெளியானதால் ஏழை எளிய மக்கள் அந்த அம்மனையே அரைக்காசு அம்மன் என்று சொல்ல ஆரம்பித்தனர்.

தல வரலாறு

தேவேந்திரன் சாபத்தால் பூமியில் பசுவாகப் பிறந்த காமதேனு, சாப விமோசனம் பெற இத்திருத்தல இறைவனுக்கு தன் காதில் நீரை எடுத்துவந்து அபிஷேகம் செய்து வந்தது. பசுவை சோதிக்க எண்ணிய சிவபெருமான் வேங்கையாக (புலி) உருமாறி பசுவை வழிமறித்தபோது, இறைவனுக்கு அபிஷேகம் செய்துவிட்டு வந்து உனக்கு இரையாகிறேன் என்று வாக்களித்துவிட்டு சென்று, ஈசனுக்கு அபிஷேகம் செய்துவிட்டு மீண்டும் வந்து புலியிடம் சரணடைந்தது. வேங்கையாய் வந்த இறைவன் மகிழ்ந்து அதற்கு சாப நீக்கமளித்தார். காமதேனு வேங்கையை சந்தித்த இடம் திருவேங்கை வாசல் என வழங்கப்படுகிறது.

பசு(கோ) தன்னுடைய காதுகளில் (கர்ணம்) கங்கை நீரைக் கொண்டு வந்து ஈசனுக்கு திருமுழுக்காட்டிய தலம் திரு–கோ–கர்ணம் என்று வழங்கப்படுகிறது. அபிஷேகம் செய்தது போக எஞ்சிய கங்கை நீரை காமதேனுப்பசு பாறையைக் கொம்புகளால் கீறி அதில் வடித்துச் சேமித்தாம். அது கபில தீர்த்தம் என்கிற பெயருடன் இன்றைய திருகோகர்ணம் கோகர்ணேஸ்வரர் திருக்கோவில் மலைச் சுனையாக. வற்றாத பெருங்கருணையாய் என்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது, இதை கங்கா தீர்த்தம் எனவும் வழங்குவதுண்டு.

நகை கிடைத்த வரலாறு

ஒருமுறை புதுக்கோட்டை மன்னரின் பாரம்பரிய நகை ஒன்று காணாமல் போய்விட்டது. இதனால் துடித்துப் போன சமஸ்தானத்தினர், அன்னையை வணங்கி தொலைந்து போன நகை திரும்ப கிடைக்குமாறு வேண்டினர். என்ன ஆச்சர்யம்! தொலைந்த பொருள் உடனேயே கிடைத்தது. இதனால் மகிழ்ந்து போன அரச குடும்பத்தினர் இந்த அன்னைக்கு விசேஷ பூஜை செய்து மகிழ்ந்தனர். இந்தத் தகவல் எங்கும் பரவி, அன்றிலிருந்து இன்றுவரை அரைக்காசு அம்மன், 'தொலைந்து போன பொருட்களை தேடித்தரும் விசேஷ தேவியானார்'

கோயில் அமைப்பு

புதுக்கோட்டை நகருக்கு அருகில் திருக்கோகர்ணம் என்னும் ஊரில் இக்கோயில் அமைந்துள்ளது. மூலவர் ஸ்ரீ கோகர்ணேஸ்வரர். அம்பாள் பெயர் ஸ்ரீ பிரகதாம்பாள். சிற்ப நுட்பங்களுடன் கூடிய, குடைவரைக் கோயிலாக கட்டப்பட்டுள்ள அற்புதமான தலம்.

மங்கள தீர்த்தம்

திருக்கோயில் வளாகத்தையொட்டி, கிழக்கில், ஒரு கற்பாறைப் பள்ளமாக மங்கள தீர்த்தம் என்னும் புனிதமான நீர்நிலை விளங்குகிறது. இத்திருக்குளத்தின் வடகரையில் படிகள் கற்பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ளன. இவை மூலவரின் குடைவரை உருவான காலத்தில் உருவானதாயிருக்கலாம் என்கிறார்கள்.

இத்திருக்குளக் கரையில் கிழக்கு நோக்கியவாறு இரண்டு தூண்களில் அழகான குதிரை வீரர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. நுட்பமான சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து பேரழகுடன் விளங்கியிருக்கக் கூடிய இச்சிற்பங்கள் பெருமளவில் சிதைந்து அழிக்கப்பட்டுள்ளன. இத்திருக்குளத்துக்கு நேரே அமைந்துள்ளது வகுளவனேசுவரின் கிழக்குப் பார்த்த கருவறை. ஆண்டின் சில நாட்களில் சூரிய ஒளி இந்தச் சிவலிங்கத்தின் மீது படியும். பிரதான தேவதைகளான வகுளவனேசுவரர், கோகர்ணேசுவரர், பிரகதாம்பாள், மாடியில் உள்ள வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர் சந்நிதிகள் எல்லாம் கிழக்கு நோக்கியே உள்ளன. மங்கள நாயகி அம்மன் கருவறை மட்டும் தெற்கு பார்த்து அமைந்துள்ளது.

திருக்கோயில் நுழைவாயிலில் முன்பு கோபுரம் எதுவும் கிடையாது. இப்போது 2005ஆம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கை ஒட்டிய திருப்பணியில், புதியதாகச் சிறிய கோபுரம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

நுழைவாயிலுக்கு இடப்புறத்தில் தேரடி விநாயகர், கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கிறார். உயரமான மேடையை ஒட்டி இவருடைய சிறிய கருவறை உள்ளது. தேரடி விநாயகருக்கே காவல் இருக்கிற

மாதிரி, கருவறைக்கு வெளியே இரண்டு அழகான யானைச் சிற்பங்கள் உள்ளன.

நேரே நடந்தால் நாற்புறமும் தூண்களோடு ஒரு சிறு மண்டபம் உண்டு. இந்த மேற்கூரைப் பகுதியில் இரண்டு கல்வளையங்கள் சங்கிலியாகத் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். இதற்கு அனுப்புமண்டபம் என்று பெயர்.

இதனை அடுத்து இருபுறமும் உள்ள தூண்களில் நல்ல ஆகிருதியோடு கூடிய பத்துத்தலை, இருபது கரங்கள் கொண்ட உருவங்களை வெகு நேர்த்தியாகக் கல்லில் வடித்திருக்கிறார்கள். இரண்டிலும் கரங்கள் பெரிதும் சேதப்பட்டுள்ளன. இந்தத் தூண்களுக்கு மேற்கில் பசுமடம் என்னும் கீதாரமும், அருகில் காசி விசுவநாத சுவாமியின் கருவறையும் உள்ளன. இதனை அடுத்துப் பதினாறு தூண்களோடு கூடிய மண்டபம் ஒன்று உண்டு. மையத்தில் உள்ள மேடையைச் சுற்றிலும் தண்ணீர் நிரப்புவதற்கேற்ற முறையில் அகழிப் பள்ளங்கள் நாற்புறமும் உள்ளன.

ராஜகோபுர வாயிலைக் கடந்தவுடன் ராயத் தொண்டைமான் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட சிற்ப மண்டபம் உள்ளது. இதன் விதானப் பகுதியில் பன்னிரண்டு ராசிகளும்

வடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனால் சிற்ப மண்டபத்தை ராசி மண்டபம் எனவும் வழங்குவர். வீரபத்திரர், ரதி மன்மதன், அருச்சுனன், காளி நடனம், ஊர்த்துவ தாண்டவர், கர்ணன், இராமர், யாளிகள், குதிரை வீரர்கள் – என்று தூண்களில் அணிவகுக்கும் கலையழகை நிதானமாகக் கண்டு மகிழ வேண்டும். சிற்ப மண்டபத்தின் இடப்புறத்தில் கல்யாண மண்டபமும், வலப்புறத்தில் ஊஞ்சல் மண்டபம் உள்ளது. இதுவும் பதினாறு கால்கள் கொண்ட அமைப்பு. புடைப்புச் சிற்பங்களாக நிறையக் கலை வடிவங்களைக் காணலாம். திருக்கல்யாணத்தன்று இறைவனும் இறைவியும் இங்கு ஊஞ்சலில் எழுந்தருளுவார்கள்.

சிற்ப மண்டபத்தைக் கடந்து நேரே நடந்தால் பிரதான மண்டபத்தை அடையலாம். இடப்புறம் திரும்பினால் நீளமான மேடையில் அறுபத்து மூவர் திருமேனிகள் அணிவகுக்கின்றன. அங்கு திரும்பாமல் சற்று நேரே வந்து இடப்புறம் திரும்பினால் அருள்மிகு பிரகதாம்பாளின் கருவறைக்குள் நுழையலாம்.

அரைக்காசு அம்மன்

மங்கள நாயகி என்றே வணங்கப்படும் திருக்கோகர்ணத்து பிரகதாம்பாள் சகல சௌபாக்கியங்களையும் அருள்பவள். பார்வதியின் அம்சமான இந்த அம்பிகை 4 கரங்களுடன் பாசம், அங்குசம் ஏந்தி, பீடத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். தலையில் நாக கிரீடம், பிறைச்சந்திரன் மற்றும் கையில் சூலம் இருக்கிறது. இவளுக்கு மஞ்சள் வஸ்திரமே பிரதானமாக அணிவிக்கப்படுகிறது. அம்பாள் எதிரே சிம்ம வாகனம் உள்ளது.

அடுத்ததாய் மீண்டும் ஏழு படிக்கட்டுகள் ஏறினால் சப்தலிங்கம் தரிசனம் கிடைக்கும். அடுத்துச் செல்லவேண்டியது சுவாமி சந்நிதிக்கு. அதற்கு முன்னால், குழந்தை வடிவேலன் கருவறைக்கு எதிரில் சிறிய கட்டுமானத்தில் உள்ள சண்டேசுவரரை தரிசிக்கலாம்.

வடக்குப் புறம் படிக்கட்டில் ஏறி நடந்தால், ஸப்த கன்னிமாரை தரிசிக்கலாம். அப்படியே நடந்தால் கிழக்கு நோக்கிபடி அருள்பாலிக்கும் மூலவர் கோகர்யேசுவரரை வணங்கலாம்.

இவருக்கு இடப்புறம் விநாயகரும் வலப்புறம் கங்காதரரும் பாறைக் குடைவில் உருவானவர்கள். எதிரில் குடைவரைக் சரிவில் அழகான கொடிமரம்–த்வஜஸ்தம்பம் நிற்கிறது. சுற்றிலும் போர்த்தியுள்ள தகடுகளில் முருகன், விநாயகர் முதலான திருமேனிகளை வடித்திருக்கிறார்கள். கொடிமரத்தைப் பார்ப்பதற்கு முன் துவாரபாலகர்கள் உள்ள மண்டபத்தை விட்டு படியேறி இடப்புறம் திரும்பினால் மரையில் வெட்டப்பட்ட படிக்கட்டுகள் உண்டு. இவற்றின்மீது

தட்சணாமூர்த்தி மற்றும் விநாயகர்

மேற்புற சுவர் சிற்ப வேலைப்பாடுகள்

நடந்தால் திருக்கோயிலின் மாடிப் பகுதிக்கு செல்லலாம்.

படிகளின் இடப்புறம் நிறைய கல்வெட்டுகள் உண்டு. நேரே சென்றால் மலைச்சுனைக்கு போகும் வழி. இடப்புறம் திரும்பினால், உயரமான தளத்தின் மீது வள்ளி தேவயானை சமேதரான சுப்பிரமணியரைக் கருவறையில் தரிசிக்கலாம். முருகனுக்குத் தென்புறம் சிறுசிறு கருவறைகளின் வரிசையாக சரஸ்வதி, மகாலெக்ஷ்மி, துர்க்கை, அன்னபூரணி, ருத்ராட்சலிங்கம் ஆகியோரை தரிசிக்கலாம்.

முருகன் கருவறைக்கு எதிரில் வேம்பும் வில்வமும் தழைத்து வளர்ந்திருக்கின்றன. இத்திருத்தலமரமான மகிழமரத்தையும் இங்கு தரிசிக்கலாம்.

ராஜகோபுரத்துக்கு மேற்கில் இக்கோவிலின் நந்தவனம் உள்ளது. மாடிப்பகுதியின் வலப்புறத்தில் பிரம்மா, ஜ்வரஹேஸ்வரர், சூரியன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் (நால்வர்), சந்திர பகவான், தண்டாயுதபாணி ஆகியோரின் திருமேனிகள் காணவேண்டியவை.

வழிபாடு – பிரசாதம்

ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, பவுர்ணமி, அமாவாசை நாட்களில் அம்பிகைக்கு விசேஷ பூஜை செய்யப்படுகிறது. இவளது சன்னதியில் அரைக்காசு அம்மன் படம் பொறித்த டாலர் பிரசாதம் தருகின்றனர். 108 எண்கள் பொறிக்கப்பட்ட யந்திரம் ஒன்று இத்தலத்தில் உள்ளது. பக்தர்கள் ஏதேனும் ஒரு எண்ணைத்தொட்டு தங்கள் பலனைத் தெரிந்து கொள்கிறார்கள். இந்த அம்பிகைக்கு வெல்லத்தை பிரதான நைவேத்யமாக படைத்து வழிபடுகிறார்கள்.

மன்னர்கள், இந்த அன்னைக்கு பிரசாதமாக வெல்லத்தை வைத்து உண்பர். அதுவே இன்றுவரை விசேஷமாக உள்ளது. எலுமிச்சை மாலை அணிவித்து இவளை வணங்கினால் தொலைத்த பொருள் மட்டுமல்ல, நமக்கு வரவேண்டிய பொருளும்கூட எளிதாகக் கிட்டி விடும் என்பது மக்களின் நம்பிக்கை.

வழித்தடம்

புதுக்கோட்டை நகருக்கு மத்தியில் இரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது.

கருத்தோவியம்: சிவன்மலை பித்தன் நடராசன்

மெய் உணர்தல்
(தத்துவ ஞானம் பெறுதல்)

353

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து.

மெய்ப்பொருளை ஐயம் இல்லாமல் உணர்ந்தவர்க்கு அவர் வாழும் இந்நிலவுலகை விட,அவர் விரும்பும் வீட்டுலகம்,நெருங்கிக் காட்சி யளிக்கும்.

திருக்குறள் கதை

கதை: பேராசிரியர் கா.முருகேசன், சென்னை

மௌன சுவாமிகள் பௌர்ணமித் திருநாள் திருக்கூட்டம் நடைபெற்றது. ஆன்மீக அன்பர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

சுவாமிகள் மெய்ப்பொருளின் தத்துவத்தை அன்பர்களுக்கு உணர்த்தினார். இதனை உணர்த்துவதற்கு அவர் இருவகையான உபாயங்களைக் கடைப்பிடித்தார். கையில் வீணையுடன் காட்சியளிக்கும் சுவாமிகள், அதிலிருந்து ஓர் மெல்லிய இன்னிசை எழுப்பினார். அவர் கடைப்பிடித்த மற்றுமோர் ஆயுதம் மௌனம்.

உலக வாழ்வில் மக்கள் இன்ப துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இவ்வுலக வாழ்வின் இன்பங்கள் பொய்யின்பம்; மேலுலக வாழ்வின் இன்பங்களே மெய்யின்பங்கள். இதனை சுவாமிகள் மூலமாக மக்கள் அறிந்து வைத்திருந்தனர்.

இந்த மாத அகண்ட தியானத்தில் சுவாமிகள் அலைபாயும் மனத்தை அடக்கி ஆள பயிற்சி கொடுத்துவந்தார். மூலாதாரத்திலிருந்து எண்ண அலைகளை எடுத்துச் சென்று ஆக்ஞையில் நிலை நிறுத்துவதே பயிற்சியின் மையக்கருத்து.

இப்பயிற்சியில் அவர்கள் புலமை பெறும்போது, இவ்வுலக சுகபோகங்கள் அனைத்தும் எச்சில் என்று உணர்வார்கள். என்றும் மங்காத புகழ் உடைய வீடு பேற்றை நல்கும் ஆற்றல் படைத்தவன் இறைவன் ஒருவனே என்ற மாபெரும் உண்மையை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
அன்பார்ந்த உறவினர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

வணக்கம். செங்குந்தர் மாளிகை சீரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பகல், இரவு எந்நேரமும் (24x7) முழு நேரப் பணியாளரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தொலைபேசி செயல்படுகிறது. அறைகள் தினசரி சுத்தம் செய்யப்படுகின்றன. மின்சாரம், குடிநீர், அனைத்தும் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. குளிர் சாதன வசதியும் தற்போது பழுது நீக்கப்பட்டுள்ளது. அறைகளில் வந்து தங்குவோர் எண்ணிக்கையும் கூடி வருகிறது.

தற்சமயம் படுக்கை விரிப்பான் (Bed Sheets), போர்வை, தலையணைகள் கூடுதலாக தேவைப்படுகின்றன. சுடுதண்ணீர் வசதி செய்ய வேண்டி உள்ளது. லிப்ட் புதியதாக வாங்க வேண்டி உள்ளது. அறைக்கு தங்க வரும் மூத்த குடிமக்கள் (Senior Citizens) மிகவும் சிரமப்படுகிறார்கள். மாளிகையின் முன்புறமும் மற்றும் முகப்பு பகுதியில், டைல்ஸ் பதிக்கப்பட வேண்டும். பெயர்பலகை பல வருடங்களாக தேய்ந்த நிலையில் உள்ளது. வண்ணப்பூச்சும் (Painting) செய்யப்பட வேண்டும். சொத்து வரி மற்றும் மெட்ரோ வாட்டர் பில் சுமார் 2 இலட்சத்துக்கும் கூடுதலாக முன் ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ளது. நிர்வாகக்குழு மற்றும் செயற்குழுவில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டிருந்தாலும், இதற்கு குறைந்தது ரூ.10 இலட்சத்துக்கும் கூடுதலாக நிதி வேண்டும் என்ற நிலையில், தற்போதைய நிதி நிலையும், கையிருப்பும் பற்றாக்குறையாக உள்ளது. ஆகவே உறவினர்களும், நிர்வாகிகளும் மனமுவந்து நன்கொடைகள் வழங்கினால் மேற்படி செய்ய வேண்டிய பணிகளை விரைந்து முடித்து, முன்பு போல 'செங்குந்தர் மாளிகை' புதுப்பிக்கப்பட்டு போதிய வருவாயை ஈட்ட முடியும்.

செங்குந்தர் மாளிகை புனரமைப்பு நன்கொடை என்ற பெயரில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பெயரில் பணவிடை/ காசோலை மற்றும் இதர வங்கி பரிவர்த்தனைகள் மூலம் தேவைப்படும் நிதியை கணிசமான அளவில் இந்தியன் யூனியன் வங்கி அல்லது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சேமிப்பு கணக்கை பயன்படுத்தி அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி விபரம்

Name : **South Indian Senguntha Mahajana Sanmgam**
Bank : **Union Bank of India** Branch : **Armenian Street**
A/c No : **527402010002485** IFSC : **UBIN0552747**

Name : **South Indian Senguntha Mahajana Sanmgam**
Bank : **Tamilnadu Mercantile Bank Limited** Branch : **George Town**
Ac No : **020100050304358** IFSC : **TMBL0000020**

இப்படிக்கு,

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் மண்டல நிர்வாகிகள்

வாழ்க மணமக்கள்

26.04.2021 திங்கட்கிழமை அன்று வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் **திரு. C.M.G.ரவி செங்குந்தர் - திருமதி ஜெயந்தி** ஆகியோரது மகன் **R.தினேஷ்குமார் B.E.,- R.மம்தா (எ) மஞ்சு M.C.A.,**

29.04.2021 வியாழக்கிழமை அன்று புதுச்சேரியில் நடைபெற்ற **திரு.P. தணிகாசலம் செங்குந்தர் - திருமதி விஜயலட்சுமி தணிகாசலம்** ஆகியோரது மகள் **T. மகாசுவேதா B.Arch., - R. தீபக் M.B.A., M.S.,ACS**

29.04.2021 வியாழக்கிழமை அன்று திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு டவுனில் நடைபெற்ற **திரு. K.G.சங்கர் செங்குந்தர் - திருமதி அமுதவல்லி** ஆகியோரது மகன் **S.கீர்த்திகுமார் B.E., – திரு.T.ராமசாமி செங்குந்தர் - திருமதி ரேணுகா** ஆகியோரது மகள் **R. இந்திரா M.A.,M.Phil.,**

15.05.2021 சனிக்கிழமை அன்று தர்மபுரியில் நடைபெற்ற **திரு. R.மணிவாசகம் செங்குந்தர் - திருமதி G.S.மல்லிகா** ஆகியோரது மகன் **G.M.கோவேந்தன் M.C.A.,** **திரு.S.அருள்மணி செங்குந்தர் - திருமதி S.ரமா** ஆகியோரது மகள் **A.ஆர்த்தி B.E.,**

28.05.2021 வெள்ளிக்கிழமை அன்று ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் நடைபெற்ற முதல்ரட்டுப்பாளையம் **திரு.நா.சேகர் செங்குந்தர் - திருமதி. புவனேசுவரி** ஆகியோரது மகன் **நா.சே.குமரன் (எ) செந்தில்குமரன் B.Tech., - கு.சண்முகப்பிரியா B.Com.,**

06.06.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆந்திரா மாநிலம் நகரியில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத் தலைவர் **திரு. P.G.செல்வராஜ் செங்குந்தர்** அவர்களின் சித்தப்பா பேரனும், **திரு. T.S.ஜீவானந்தம் செங்குந்தர் - திருமதி சிவகாமி** ஆகியோரது மகனுமாகிய **T.J.பிரசாந்த் B.E., - திரு.V.D.காளிதாசன் செங்குந்தர் - திருமதி பாலாமணி** ஆகியோரது மகள் **V.K.ஈஸ்வரி B.E.,**

13.06.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையில் நடைபெற்ற ஈரோடு மேற்கு கிளை செங்குந்த மகாஜன சங்கத்தின் பொருளாளர் **திரு. சி.பொ.சக்திவேல் செங்குந்தர்** அவர்களின் சகோதரரும், ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியருமான **திரு.சி.பொ.சித்தேஸ்வரன் செங்குந்தர் - திருமதி. ச.ஜெயந்தி** ஆகியோரது மகளுமான **சி.ரோகிணி B.E., - மோ.கண்ணன் M.C.A.,**

16.06.2021 புதன்கிழமை அன்று சென்னையில் நடைபெற்ற மகாராஷ்டிரா மாநில செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னாள் தலைவர் தெய்வத்திரு. **S.தியாகராஜன் செங்குந்தர்** அவர்களின் மருமகன் **திரு. V.பத்மநாதன் செங்குந்தர் – திருமதி P.வசந்தா** ஆகியோரது மகள் **Dr.P.காயத்ரி - Dr. M.நித்தியானந்தன்**

23.06.2021 புதன்கிழமை அன்று பெரம்பலூரில் நடைபெற்ற நெய்வேலி **திரு. K.ரெங்கநாதன் செங்குந்தர் – திருமதி தனலட்சுமி ரெங்கநாதன்** ஆகியோரது மகள் **ரெ. அபிநயா B.Tech., - ச.முத்துக்குமார் B.E.,**

28.06.2021 திங்கட்கிழமை அன்று ஆந்திர மாநிலம் சத்திரவாடாவில் நடைபெற்ற **திரு. P.A.முனுசாமி செங்குந்தர் – திருமதி நாகம்மாள்** ஆகியோரது மகள் **P.M.ஆஷா B.Tech., - N.D.யுவராஜ் C.A.,**

ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம்ம வீட்டுக் கல்யாணம்

29.04.2021 வியாழக்கிழமை அன்று தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் நடைபெற்ற தூத்துக்குடி மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் **திரு. ச.சங்கரநாராயணன் செங்குந்தர் – திருமதி ராமலட்சுமி** ஆகியோரது மகள் **S.தனலட்சுமி B.E., - A.மாரிமுத்து B.E.,**

ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆயுள் உறுப்பினர்
கட்டணம்: ரூ. 100
செங்குந்த மித்திரன்
15 ஆண்டு சந்தா: ரூ. 1000

வங்கி விவரம்:

South Indian Sengunthar Mahajana Sangam

SB A/c No	: **020100050304358**
Bank	: **Tamilnadu Mercantile Bank Limited**
Branch	: George Town, Chennai - 600001
IFSC	: **TMBL0000020**

அல்லது

South Indian Sengunthar Mahajana Sangam

SB A/c No	: **527402010002485**
Bank	: **Union Bank of India**
Branch	: Armenian Street Branch, Chennai
IFSC	: **UBIN0552747**

அல்லது எந்த வங்கியிலிருந்தும் மேற்கண்ட கணக்கின் பெயருக்கு DD எடுத்தும் அனுப்பலாம்.

பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை
Pavendar Bharathidasan Arakkattalai

SB A/c No.	: **420141716**
Bank	: **Indian Bank**
Branch	: MGT Branch, Thambu St, Chennai
IFSC	: **IDIB000M002**

செங்குந்தர் மாளிகை

செங்குந்தர் மாளிகை தற்போது சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தங்குவதற்கு ஏற்ற நிலையில் முழு சுகாதார, குடிநீர் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் உறவினர் பெருமக்கள் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணை பயன்படுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொலைபேசி எண்: 044-25226852

விடுதி கட்டணம்

சிங்கிள் ரூம்	:	ரூ. 250/–
டபுள்ஸ் ரூம்	:	ரூ. 500/–
டபுள்ஸ் ரூம் ஏ/சி	:	ரூ. 750/–

மாத வாடகைக்கும் அறைகள் தங்குவதற்கு விடப்படுகின்றன.

சிங்கிள் ரூம் (பொது)	ரூ. 6,000/–
முன்பணம்	ரூ. 30,000/–
சிங்கிள் ரூம் உறுப்பினர்	ரூ. 5,000/–
முன்பணம்	ரூ. 25,000/–
டபுஸ் ரூம் (பொது)	ரூ. 10,000/–
முன்பணம்	ரூ. 50,000/–
உறுப்பினர்	ரூ. 9,000/–
முன்பணம்	ரூ. 45,000/–

தற்போது இரவு / பகல் முழு நேரமும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

– நிர்வாகம்

அறிவிப்பு

செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்:

செங்குந்த மித்திரன் இதழ் தொடர்பான சந்தேகங்களுக்கும், புகார்களுக்கும் கீழ்க்கண்ட அலைபேசி எண்: **97911 17261**-க்கு தொடர்பு கொள்ளவும். செங்குந்த மித்திரன் இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் சந்தா எண், முகவரி மற்றும் அலைபேசி எண்ணுடன் அஞ்சலில் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறந்து போன சந்தாதாரர்களின் விபரங்களை சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் தெரிவிப்பதோடு, குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் பெயரில், ஆதார் அடையாள அட்டை எண்–ஐ பயன்படுத்தி புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

அறிவிப்பு

திருமண தகவல் மையம் செவ்வாய் கிழமை தவிர அனைத்து நாட்களிலும் செயல்படும்.

ஜாதகப் பதிவுக் கட்டணம் (1 வருடம்) ரூ. 500/-

அலுவலக நேரம்:

தினசரி காலை 11.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

- பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982

செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

- வாரியார் சுவாமிகள்

ஜுன் 2021 மலர்: 21 இதழ்: 6

ஆசிரியர்:

K.P.K.செல்வராஜ்

சந்தா விபரம்

தனி இதழ் : ரூ. 15/-

15 ஆண்டு சந்தா : ரூ. 1000/-

1-12-2020 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்

கலர்

நடுப்பக்கம்	:	ரூ. 15,000
முன் உள்அட்டை	:	ரூ. 10,000
பின் அட்டை	:	ரூ. 10,000
பின் உள்அட்டை	:	ரூ. 10,000
முழுப்பக்கம்	:	ரூ. 5,000
அரைப்பக்கம்	:	ரூ. 2,500
கண்ணீர் அஞ்சலி (B&W)		ரூ. 3,500

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

South Indian Sengunta Mahajana Sangam

எண்.58, (ப. எண்.89), அரண்மனைக்காரன் தெரு, சென்னை–600001.

தொலைபேசி : **044 - 25226852**

நிர்வாக அலுவலகம் (கடிதம் & தொடர்புக்கு)

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம் (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), எண்.25, ஆரிங்டன் சாலை, சென்னை–600030.

Phone: 044 - 42957999, 97911 17261

E-mail: sengunthamithiran@gmail.com

http://www.sengunthamithiran.in

செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

- தங்கள் முகவரியில் தொலைபேசி எண்ணையும், மின் அஞ்சல் முகவரியையும் சேர்க்காத சந்தாதாரர்கள் தற்போது உடனடியாக பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.
- இறந்து போன சந்தாதாரர்களின் விபரங்களை, அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் தலைமைச் சங்கத்திற்கு, (துக்க ஆதாரத்துடன்) உடன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
- செங்குந்த மித்திரன் இதழ் கிடைக்கப் பெறாத வாசகர்கள் தங்கள் புகாரை எழுத்து வடிவில் கடிதம் அல்லது E–mail மூலமாக தலைமை சங்கத்திற்கு தெரிவிக்கவும். தொலைபேசியில் தெரிவிப்பதை தவிர்க்குமாறு அருள் கூர்ந்து கேட்டுக் கொள்கிறோம்.
- தங்கள் தொலைபேசி எண்ணையும், மின் அஞ்சல் முகவரியையும் ஏற்கனவே அனுப்பி உள்ள சந்தாதாரர்கள் மீண்டும் அனுப்ப வேண்டாம்.
- இருப்பிட மாற்றம் செய்யும் சந்தாதாரர்கள் உடனுக்குடன் தங்கள் முகவரி மாற்றத்தை அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மாதந்தோறும் செங்குந்த மித்திரன் இதழ்கள் திரும்பி வருவதை இதன் மூலம் தடுக்க முடியும்.
- வர்த்தகம் மற்றும் திருமண வரன் விளம்பரங்கள் அளிக்கும் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விரைவில் இதழ் கிடைக்க வேண்டும் என்று கருதினால் ரூ.60/– ஐ கொரியர் கட்டணமாக தங்கள் விளம்பர கட்டணத்துடன் சேர்த்து அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.
- சங்க நிகழ்ச்சிகளை செங்குந்த மித்திரன் இதழில் வெளியிட விரும்பும் உறுப்பினர்கள், நிர்வாகிகளின் பரிந்துரையுடன் sengunthamithiran@gmail.com என்ற மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். வாட்ஸ்அப் மூலம் அனுப்பப்படும் செய்திகள் கண்டிப்பாக செங்குந்த மித்திரன் இதழில் பிரசுரிக்க ஏற்க இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
- மாவட்ட, கிளைச் சங்க உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் வர்த்தக, திருமண மற்றும் இல்ல விழாக்கள், நினைவஞ்சலி விளம்பரங்களைப் பெற்று அனுப்புவது செங்குந்த மித்திரன் வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.
- செங்குந்த மித்திரன் இதழ் புதுப்பிக்காத வாசகர்கள் மேலும் காலம் தாழ்த்தாமல் உடன் புதுப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். சந்தா சேர்க்கை மற்றும் பதிவு குறைவாக இருக்கும் இந்த நேரத்தில் இதழ் தங்கு தடையின்றி இப்போதுள்ள பொலிவுடன் தொடர்ந்து வரவேண்டும் என்றால் அதற்கான முயற்சியும், நடவடிக்கையும் வாசகர்கள் கையிலும், நிர்வாகிகள் மனதிலும்தான் உள்ளது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தொடர்ந்து தங்கள் நல் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வேண்டுகிறோம்.

R.P.குமரகுருபரன், பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

வேலைவாய்ப்பு அறிவிப்பு

EMPLOYMENT NOTICE

பதவி 1 : கணக்காளர்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அலுவலகக் கணக்குகளைப் பராமரிக்கவும், அன்றாட அலுவலக தட்டச்சுப் பணிகளைக் கணினியில் மேற்கொள்ளவும், B.Com படித்த கணக்கியல் அனுபவமும், தமிழ் – ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சு செய்யக் கூடிய திறனும் உடைய அனுபவமுள்ள ஆண் / பெண் பட்டதாரிகள் உடனே விண்ணப்பிக்கவும்.

செங்குந்த இனத்தைச் சேர்ந்த 35 வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். தகுதி, அனுபவத்துக்கு ஏற்ற வகையில் சம்பளம் (Salary Negotiable) வழங்கப்படும்.

பதவி 2 : மேலாளர்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தால் நடத்தப்படும் செங்குந்தர் மாளிகையின் அலுவல்களைக் கவனிக்க முழுநேரப் பணியாளர் தேவை.

கல்வித் தகுதி	:	மேல்நிலைப் பள்ளி படிப்பு தேர்ச்சி
வயது	:	45 முதல் 55 வயது வரை
சம்பளம்	:	மாதம் ரூ. 15000/–

- மாளிகையில் தங்கும் வசதி செய்து தரப்படும்.
- முன்னுரிமை : சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.
- செங்குந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.
- வேலையில் சேர விரும்பும் நபர்கள் உரிய சான்றுகளுடன் வார நாட்களில், அலுவலக நேரத்தில் நிர்வாக அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

கூடுதல் விபரங்களுக்கு **97911 17261** என்ற அலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி: 15-07-2021

– நிர்வாகம்

SCM குரூப் ஆப் கம்பெனீஸ் மற்றும் செங்குந்த மகாஜன சங்கம் திருப்பூர் வடக்குப் பகுதி இணைந்து 11–06–2021 அன்று நமது செங்குந்தர்கள் வசிக்கும் 20 பகுதிகளில் கொரோனா நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. நிவாரணத் தொகுப்பில் அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்களும், கபசுர குடிநீரும் வழங்கப்பட்டது. சுமார் 400 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வை ஸ்ரீநகர் வேலுச்சாமி, ஸ்ரீநகர் முத்துக்குமார், N.நாராயணமூர்த்தி, வடிவேல், ம.செல்வம், மருதாச்சலம், சேமலையப்பன், அங்கப்பன், சென்னியப்பன், சரவணகுமார் மற்றும் நிர்வாகிகள் ஸ்ரீநகர் மற்றும் 15 வேலம்பாளையம், ராக்கியாபாளையம், நெசவாளர் காலனி, பெரியாயிபாளையம், செட்டிபாளையம், சொக்கனூர், கருக்குபாளையம், தொட்டிபாளையம், தேவனம்பாளையம், கனக்கம்பாளையம், வாவிபாளையம், குமரன் காலனி, தோட்டத்துப் பாளையம் ஆகிய பகுதிகளில் வழங்கப்பட்டது.

வாழ்த்துகின்றோம்

குறிஞ்சிப்பாடி தியாகி **அ.வெள்ளையா செங்குந்தரின்** இளவல் **அ.முருகேச செங்குந்தரின்** மகனும், கடந்த 56 ஆண்டுகளாக வேலூரில் வசித்து வருபவருமான குறிஞ்சிப்பாடி **திரு. மு.ஜெயராமன் செங்குந்தர்** அவர்களின் 75வது அகவை நிறைவு நாளின் (10.05.2021) நினைவாக **ரூ. ஆயிரத்து ஒன்று மட்டும்** செங்குந்தர் மாளிகை புனரமைப்பு நிதியாக அளித்தமைக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர் சுற்றுப்பயண விபரம்

ஆகஸ்ட் 2021

20-08-2021 வெள்ளி காலை 8.00 மணி

தர்மபுரி:
நெசவாளர் நகர் கிளைச் செயலாளர் திரு.K.தினகரன் செங்குந்தர் மகன் திருமண விழா

20-08-2021 வெள்ளி காலை10.00 மணி

தாராசுரம்:
கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் 831வது குருபூஜை விழா மற்றும் ராஜ கோபுர கால்கோள் விழா

22-08-2021 ஞாயிறு காலை 10:00 மணி

மதுரை:
திருவாப்புடையார் கோயில் செங்குந்தர் உறவின்முறை திருமண மண்டபம் திறப்பு விழா

செப்டம்பர் 2021

08-09-2021 புதன் காலை 6:00 மணி

கண்டாச்சிபுரம் - விழுப்புரம்
வீரங்கிபுரம் கிளைச் சங்க நிர்வாகி திரு.S.கண்ணன் செங்குந்தர் மகன் திருமண விழா

நிகழ்ச்சிகள் அனைத்தும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து நடத்தப்படும்

செங்குந்தர்களால் நடத்தப்பட்ட திருவிழாக்கள்

19.04.2021 திங்கட்கிழமை முதல் 28.04.2021 புதன்கிழமை வரை திருப்பூர் மாவட்டம் **அருள்மிகு காமாட்சி அம்மன் சித்ரா பௌர்ணமி 71 ம் ஆண்டு பொங்கல் வசந்த உற்சவப் பெருவிழா.**

29.04.2021 வியாழக்கிழமை திருப்பூர் மாவட்டம் சின்னாண்டிபாளையம் **அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோயில் மஹாகும்பாபிஷேக விழா**

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
ஆயுள் உறுப்பினர்,
செங்குந்த மித்திரன் ஆயுள் சந்தா
தகவல் படிவம்

ஆயுள் உறுப்பினர் எண் :

செங்குந்த மித்திரன் சந்தா எண் :

புகைப்படம்

1. பெயர்
2. தந்தை / கணவர் பெயர்
3. வயது — பிறந்த தேதி
4. கல்வி — 5. இரத்த வகை
6. தொழில்
7. முகவரி

அஞ்சல் எண்

8. மாவட்டம்/மாநிலம்

10. மொபைல் எண்

11. வாக்காளர் அட்டை எண்

12. ஆதார் எண்

13. மின்னஞ்சல் முகவரி

நமது சங்கத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடப்பேன் எனவும், செங்குந்த சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு என்னால் இயன்றளவு ஒத்துழைப்பேன் எனவும் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மை எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்:

கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி:

**பொதுச்செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
எண்.25, ஆரிங்டன் சாலை, வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம்
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), சென்னை-600030**

உதவிடுவோம் வாரீர்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் டெக்ஸ்டைல்ஸ் திரு.குழந்தைசாமி செங்குந்தர் பேத்தியும் திரு. சதீஷ்குமார் - திருமதி. பிரியதர்ஷினி ஆகியோரது 23 மாதக் குழந்தையான **மித்ரா**வுக்கு **தண்டுவட தசைநார் சிதைவு** நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு ரூ.16 கோடி செலவாகும் என்று கோவை மெடிக்கல் சென்டர் ஹாஸ்பிடல் தெரிவித்துள்ளது.

குழந்தையின் உயிர் காக்க நம்மால் முடிந்த அளவு தொகையை அளிக்க வேண்டுகின்றோம்.

வங்கிக் கணக்கு விபரம்:

பெயர்	:	K.SATHEESH KUMAR
கணக்கு எண்	:	1147155000120725
வங்கி	:	KVB
கிளை	:	KOMARAPALAYAM
IFSC CODE	:	KVBL0001147

GPAY NUMBER
9500623402

தொடர்பு எண்
9003724244

நன்றி! நன்றி!! நன்றி!!!

குழந்தை மித்ராவின் மருத்துவச் செலவிற்கு
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர்
திரு. K.P.K.செல்வராஜ் அவர்களின் வேண்டுகோளை ஏற்று
நன்கொடைகள் வழங்கிக் கொண்டிருக்கும்
மாநில, மாவட்ட, கிளைச் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள்
மற்றும் செங்குந்த சொந்தங்களுக்கு
நன்றி! நன்றி!! நன்றி!!!

பொதட்டூர்பேட்டை

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர் பேட்டை நகர செங்குந்தர் மகாஜன சங்கம் சார்பாக தலைவர் Ln.A.R.சுப்பிரமணி தலைமையில் கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்த குடும்பத்தினருக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் 01.06.2021 நாளில் 50 பேருக்கு வழங்கப்பட்டது. இதில் 30 பேருக்கு E.S.T.பக்தவச்சலம் அவர்களும் இதர 20 பேருக்கு நகர தலைவர் Ln.A.R.சுப்பிரமணி, P.N.மாணிக்கம், N.K.நரசிம்மன், D.A.மணி ஆகியோரால் வழங்கப்பட்டது.

செங்குந்த மித்திரனில் விளம்பரம் செய்யுங்கள்!

உங்கள் இல்லத் திருமண விழா, காதணி விழா, புதுமனை புகுவிழா, பிறந்த நாள் விழா போன்ற சுபநிகழ்ச்சிகளை செங்குந்த மித்திரன் இதழில் விளம்பரமாக வெளியிடலாம்.

அரைப்பக்கம் (கலர்) (140mm X 100mm)	–	ரூ. 2,500
முழுப்பக்கம் (கலர்) (140mm X 200mm)	–	ரூ. 5,000
கண்ணீர் அஞ்சலி முழுப்பக்கம் (B&W)	–	ரூ. 3,500

மேலும் விபரங்களுக்கு தலைமைச் சங்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட கிளைச் சங்கங்கள் நடத்தும் திருமணத் தகவல் மையத்தின் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.
தனி நபர்கள் நடத்தும் திருமணத் தகவல் மையத்தின் விளம்பரத்திற்கு அனுமதி இல்லை.

யாளி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,
YALEY CHITFUNDS (P) LTD.,

GSTIN: 33AAACY0719M2Z9

Since 1986

தெய்வத்திரு
Dr. Lion.யாளி S.மதிவாணன்
நிறுவனர்

மத்திய மாநில அரசுகளின் சீட்டு நிதிச் சட்டப்படி பதிவு பெற்ற சீட்டுகள் நடத்தும் நிறுவனம்

223, எழில் இல்லம், மேட்டூர் ரோடு, ஈரோடு – 638 011.
Ph : 0424 - 2259007, 4020258 94431 28386 / Email : yaleychitfunds@gmail.com

எமது பெருமை மிகு சீட்டு குரூப்புகள்

மாதத் தவணை	மாதங்கள்	சீட்டு தொகை
₹. 2,00,000	25	₹. 50,00,000
₹. 1,00,000	25	₹. 25,00,000
₹. 50,000	25	₹. 12,50,000
₹. 50,000	40	₹. 20,00,000
₹. 25,000	40	₹. 10,00,000
₹. 30,000	40	₹. 12,00,000
₹. 15,000	40	₹. 6,00,000
₹. 20,000	30	₹. 6,00,000
₹. 10,000	30	₹. 3,00,000
₹. 20,000	25	₹. 5,00,000
₹. 10,000	25	₹. 2,50,000
₹. 8,000	25	₹. 2,00,000
₹. 4,000	25	₹. 1,00,000

JC பிரேம்சரண் மதிவாணன்
நிர்வாக இயக்குநர்
94433 28386

புதிய சீட்டில் இணைய தொடர்புக்கு

94433 28701 | 94432 28731 | 94877 28386

தினசரி, வார மற்றும் மாத கலெக்ஷன்கள் உண்டு

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் இரண்டாவது தலைவர்

திரு.ஆ.வே.முத்தைய முதலியார், பி.ஏ.,பி.எல்.,

புதுவை பிரெஞ்ச் அரசாங்கத்தின் இந்திய அமைச்சர்

ஆலப்பாக்கத்திலும் புதுவையிலும் பல்வேறு அறப்பணிகள் நிறுவிய ஆனந்த முதலியாரின் பேரனாக – வேலாயுத முதலியார் மகனாக, ஆ.வே.முத்தைய முதலியார் 7–10–1879ல் புதுவையில் பிறந்தார்.

இவர் சட்டக் கல்வி பயின்றார். பிரெஞ்ச், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினார். அன்னிபெசண்ட் அம்மையாரின் தியோசாபிகல் சொஸைட்டியின் தென்னகப் பிரிவின் செயலாளர்; அரவிந்தரின் நெருங்கியத் தொண்டர். ரமண மகரிஷியுடனும், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தாம் எடுத்துச் சொல்லும் கருத்துக்களை தம் வாழ்க்கை நெறியாக செயல்படுத்திக் காட்டினார். உயிர்க் கொலையை விரும்பாதவர். தம் காலணிகளாக தோல் செருப்புக்களை அணியாமல் மரத்தால் ஆன மதியடிகளையே பயன்படுத்தினார்.

தமிழ்ப்பற்று மிக்கவர். பாவேந்தர் பாரதிதாசனுடன் மிகவும் நெருங்கிப் பழகினார். பாவேந்தரின் சமுதாயத் தொண்டிற்கு உறுதுணையாய் விளங்கினார். அவர் இவரைத் தமது அரசியல் ஆசானாகவே கருதினார். இவர் பிரெஞ்ச் அரசின் தலைமைச் செயலாளராக இருந்து மிகச்சிறப்பாகப் பணியாற்றி வந்தார். திரு.ஆ.வே.முத்தைய முதலியார் அவர்களின் அரசு நிர்வாகத் திறனையும், சமுதாயத் தொண்டினையும் பாராட்டும் முறையில்,

பிரெஞ்ச் அரசு அவருக்கு Chevalier De Lalegion DP Honour என்ற மிக உயர்ந்த விருதினை ('சர்' பட்டம் போன்ற விருது) வழங்கிற்று. இவர் தலைவர் பதவியேற்ற போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முதலாவது மாநில மாநாடு 19, 20–01–1929ல் ஈரோட்டில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சமூக மாநாடு, வர்த்தகர் மாநாடு, வாலிபர் மாநாடு முதலிய மூன்று மாநாடுகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன. சமூக மாநாட்டுத் தலைவர் திரு.ஆ.வே.முத்தைய முதலியார், வாலிப மாநாட்டுத் தலைவர் குடியேற்றம் முனிசிபல் சேர்மன் திரு.மா.ரெ.

பீமராஜ் முதலியார், வர்த்தக மாநாட்டுத் தலைவர் தென்காசி திரு.T.P.K.ஆறுமுக முதலியார்.

முன்னாள் தலைவர் திரு.ஜெ.எஸ். அவர்களின் பாட்டனார் திரு.மொட்டையப்ப முதலியார் அவர்கள், மாநாடு வெற்றி பெற மிகச் சிறப்பாகத் தொண்டாற்றினார். இம்மாநாட்டுக்கென்றே, சென்னையிலிருந்து ஈரோட்டுக்கு "செங்குந்தர் ஸ்பெஷல்" என்று ஒரு தனி ரெயிலே விடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புதுவை ஆ.வே.முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் சங்க தலைமைப் பொறுப்பிலிருந்த காலத்தில் 16,17—5—1931—ல் காஞ்சிபுரத்தில் இரண்டாவது மாநாடும் 26—12—1931ல் மயிலாப்பூரில் மூன்றாவது மாநாடும், 12, 13—03—1933ல் திருவாரூரில் நான்காவது மாநாடும் 2, 3—2—1935ல் திருவத்திபுரத்தில் ஐந்தாவது மாநாடும் சிறப்பாக நடைபெற்றது.

அவர் 1935ல் தாமே விரும்பி, அரசின் தலைமை செயலாளர் பதவியிலிருந்து விலகி, அரவிந்த் ஆசிரமவாசியாக மாறினார். 23—05—1936ல் தலைமை சங்கத் தலைவர் பதவியை துறந்தார். முத்தைய முதலியாரின் ஒரு புதல்வர் டாக்டர். இளைய புதல்வர் பிரெஞ்ச் பேராசிரியர். ஒரு மகள் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்.

பிரெஞ்ச் ஆட்சியினின்று புதுமை மாநிலம் விடுபட்டு இந்தியத் தாயகத்துடன் இணைந்தபின், நடக்க இருந்த பொதுத் தேர்தலில் மக்கள் முன்னணி வேட்பாளராக முத்தைய முதலியார் வேட்பு மனு கொடுத்தார். ஆனால் இடையில் 23—06—55ல் இயற்கை எய்தினார், அவருக்குப் பதிலாக அவருடைய சீடர் பாரதிதாசன் போட்டியிட்டு வெற்றிப்பெற்று, புதுவைச் சட்டப்பேரவை உறுப்பினரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

29—06—2021 ஞாயிறு அன்று திருப்பூர் மாவட்ட செ.ம.சங்கத்தின் தலைவர் A.R.செல்வராஜ், செ.ம.சங்கத்தின் மாநிலச் செயலாளர் M.உதயசங்கர், திருப்பூர் தாலுகா செ.ம.சங்கத் தலைவர் மணமாலை ஸ்ரீனிவாசன், செயலாளர் குருசர்வா P.அருணாசலம், துணை செயலாளர் ராஜராஜன், பொருளாளர் G.சீனிவாசன், வேணி மா.செல்வராஜ், பவானி செ.ம.சங்கத்தின் தலைவர் பழனியப்பன் மற்றும் சங்க நிர்வாகிகள் குழந்தை மித்ராவை நேரில் சந்தித்து நிதியளித்து விரைந்து நலம் பெற வாழ்த்தினர்.

தெய்வத்திரு. கே.எம்.கோவிந்தராசனார் அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்

குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

இளநிலை (UG)

B.A	- ஆங்கிலம்
B.B.A	- வணிக ஆள்முறையியல்
B.Com(General)	- வணிகவியல்
B.Com(CA)	- கணினி பயன்பாட்டு வணிகவியல்
B.C.A	- கணினி பயன்பாட்டியல்
B.Sc	- கணினி அறிவியல்
B.Sc	- உயிர்வேதியியல்
B.Sc	- நுண்ணுயிரியல்
B.Sc	- வேதியியல்
B.Sc	- கணிதம்

முதுநிலை (PG)

M.A	- ஆங்கிலம்
M.Com(General)	- வணிகவியல்
M.Com(CA)	- கணினி பயன்பாட்டு வணிகவியல்
M.Sc	- உயிர்வேதியியல்
M.Sc	- தகவல் தொழில்நுட்பவியல்
M.Sc	- கணிதம்
M.Sc	- வேதியியல்
M.Sc	- பயன்பாட்டு நுண்ணுயிரியல்
M.B.A	-

ஆய்வியல் நிறைஞர் (M.Phil)

M.Phil	- வணிகவியல்
M.Phil	- உயிர்வேதியியல்
M.Phil	- கணினி அறிவியல்
M.Phil	- கணிதம்
M.Phil	- வேதியியல்

முனைவர் பட்டப்படிப்பு (Ph.D)

Ph.D	- வணிகவியல்
Ph.D	- உயிர்வேதியியல்
Ph.D	- நுண்ணுயிரியல்
Ph.D	- வேதியியல்

கே.எம்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழு

K.M.G.பாலசுப்பிரமணியன்

K.M.G.சுந்தரவதனம் B.A.,B.G.L.,

K.M.G.இராஜேந்திரன் B.Sc.,M.L., வழக்கறிஞர்

K.M.G.முத்துக்குமார் B.Com.,



சூலையில் உதிர்ந்த சோலை மலர்கள்!

நங்கூரம் போலிருந்து நன்மை செய்து
நற்றமிழால் தழைத்தவரை நாடு போற்றும்,
செங்குந்த மித்திரனின் செழுமை ஆசான்
செகமெல்லாம் போற்றுகின்ற சிறப்பின் ஞானி,
திங்களாக காஞ்சியிலே தீபமாய்த் தோன்றி
திக்கெட்டும் புகழ்பெற்ற திருவின் மைந்தன்,
செங்கதிராம் நாகலிங்க முதலி யாரின்
செய்திறனை நினைத்திடுவோம் சீலம் காண்போம்.

எண்ணற்ற இன்னல்கள் எதிரே வந்து
இமயமாய் நின்றபடி இளித்த போதும்,
பண்கொண்ட நூல்களையே பலவும் யாத்து
பரிசாக ஈந்திங்கே பகைமை சாய்த்தார்,
மண்கண்ட ஞானிகளில் மக்கள் போற்றும்
மகத்தான பணிபுரிந்த மாசில் வீரர்,
வண்ணக்க எஞ்சியத்தின் விருது பெற்ற
வழிகாட்டி சூலையில் வாழ்வை நீத்தார்.

திருப்பத்தை ஏற்படுத்த தமிழைக் கற்று
திருப்புகழ்போல் பலநூல்கள் தந்த ஆசான்,
திருப்பத்தூர் பெரியவராம் தமிழின் செல்வர்
கா.அ.சண்மு கமுதலியார் கைத்தறி நூலில்,
பொறுப்போடு தொழில்செய்து புகழும் பெற்று
பொன்னான தன்னுழைப்பைப் பொதுவில் ஈந்து,
விருப்போடு வாழ்ந்திட்ட வள்ளல் நம்மின்
வாழ்வுக்குக் கொள்கையை வகுத்துத் தந்தார்.

ஆயிரத்தில் பிறைகளையும் வாழ்வில் கண்டு
அறிவார்ந்த நம்மினத்தின் ஆற்றல் கூட்டி,
பாயிரமாம் பாடல்கள் பலவும் கூறி
பண்பாட்டைக் காத்திட்ட பாரில் மேலோன்,
தாயன்பு கொண்டிட்ட மகாத்மா காந்தி
தந்திட்ட பணிகளையும் தரமாய்ச் செய்தார்,
சேயன்பு மாறாமல் சமூகம் காத்து
சூலையில் பெருமகனார் சொர்க்கம் சேர்ந்தார்!

கவிஞர். அ.முத்துசாமி, தாரமங்கலம்.

மணமகன் தேவை

பெயர் : **T.கீர்த்தனா தேவி**

பிறந்த தேதி : 06.06.1996, தாது வருடம் வைகாசி மாதம் 24ம் தேதி பஞ்சமி திதி

நட்சத்திரம் : திருவோணம்

ராசி, லக்னம் : மகரம், கன்னி

நிறம், உயரம் : சிவப்பு, 157 செ.மீ.,

படிப்பு : B.E., (ECE),

பணி : ALP, Southern Railways, Trichy

தந்தை பெயர் : அ.தவமணி, Supervisor, Ali Saieh Al Amevi est, Aramco Project, Saudi Arabia

தாயார் பெயர் : T.செல்வசுந்தரி, B.Lit.,

உடன் பிறந்தோர் : T.ஹியாதவ், B.E.,

முகவரி : 727 A, செங்குந்தர்புரம், மணமேல்குடி, புதுக்கோட்டை மாவட்டம் - 614 620

செல் : **98656 78852**

எதிர்பார்ப்பு : Govt & Private job

சனி கே	பு	சூ செ	சு
	இராசி		
சந்			
கு			ல ரா

		ல	சூ ரா
	நவாம்சம்		சந் சனி
செ சு			
பு கே	கு		

06/20580/07.05.2021

சந்திர திசை இருப்பு 1 வருடம் 5 மாதம் 20 நாள்

பெயர் : **N.அபிநயா (எ) மகேஸ்வரி**

படிப்பு : M.B.B.S., (CRRI),

இனம் : செங்குந்தர் (கைக்கோளர்)

நிறம், உயரம் : சிகப்பு, 165 செ.மீ.,

பிறந்த தேதி : 28.09.1997 @ 2.41 P.M. ஈஸ்வர வருடம் புரட்டாசி மாதம் 12ந் தேதி, ஞாயிற்றுக்கிழமை, கல்கத்தா

நட்சத்திரம் : மகம் 2ஆம் பாதம்

ராசி, லக்னம் : சிம்மம், மகரம்

தந்தை பெயர் : திரு.K.நடராஜன், Army Service (Retd),

தாயார் பெயர் : திருமதி.G.அனுசுயா, Dy Post Master (Retd),

உடன் பிறந்தோர் : இல்லை

முகவரி : நெ.26, பாரதியார் சாலை, ஜெம் நகர், செவிலிமேடு, காஞ்சிபுரம் - 631 502

செல் : **99946 04952 (W), 88386 02302**

மின்னஞ்சல்: natarajankuppuswamy41594@gmail.com

எதிர்பார்ப்பு : MBBS., MS., MD., அரசு / தனியார் மருத்துவர்

சொத்து விபரம் : சொந்தமாக மாடி வீடு 1 உள்ளது

சனி(வ)			
கே	இராசி		
ல கு(வ)			சந் ரா
	செ	சு	சூ பு

	சூ	சந் சு கே	கு
பு	நவாம்சம்		ல
	சனி ரா		செ

29/20547/30.04.2021

கேது திசை இருப்பு 4 வருடம் 7 மாதம் 27 நாள்

மணமகன் தேவை

பெயர் : **Dr.R.வண்டார்குழலி**
படிப்பு : B.D.S., (பல் மருத்துவர்)
பிறந்த தேதி : 30.12.1994,
பவ வருடம் மார்கழி மாதம்
15ஆம் தேதி வெள்ளிக்கிழமை
பகல் மணி 2.02 P.M.

நட்சத்திரம் : அனுசம்
ராசி, லக்னம் : விருச்சிகம், மேஷம்
நிறம், உயரம் : சிகப்பு, 165 செ.மீ.,
தந்தை பெயர் : Dr.N.இராஜகோபால், M.A., M.A., M.Phil., M.Ed., Ph.D., இணைப்பேராசிரியர், பொருளியல் துறை, அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்
தாயார் பெயர் : S.செல்வி, M.A., M.Phil., M.Ed., வட்டாரக் கல்வி அலுவலர், குறிஞ்சிப்பாடி.
உடன் பிறந்தோர் : சகோதரி 1 B.Pharm., (Final Year)
முகவரி (பூர்வீகம்) : No.24, காமாட்சியம்மன் கோயில் தெரு, லால்பேட்டை, காட்டுமன்னார்கோயில் தாலூக்கா, கடலூர் மாவட்டம் - 608 303
முகவரி (இருப்பிடம்) : No.1, சிவகாமி அபார்ட்மெண்ட், கச்சேரித் தெரு, காட்டுமன்னார்கோயில், கடலூர் மாவட்டம் - 608 301
செல் : **96299 79744, 97913 53214, 99949 14123**
எதிர்பார்ப்பு : அரசுப்பணி, மருத்துவம் மற்றும் பிற துறையில் நல்ல பணியில் உள்ள வரன்.

	ல கே		
சனி	இராசி		
பு			செ
சூ	கு சந்	ரா சு	

ரா		செ	சு
	நவாம்சம்		
பு			சூ
	சனி சந்	கு	ல கே

19/20549/19.05.2021

சனி திசை இருப்பு 0 வருடம் 3 மாதம் 26 நாள்

Name : **Dr.LATHA MAHESWARI**
Qualification : M.B.B.S (Studying M.D Psychiatry first year)
Date of Birth & Time :
26-Aug-1994 / 05:35:00 AM
வெள்ளிக்கிழமை பவ வருடம்
ஆவணி மாதம் 9ஆம் தேதி
Place of Birth : Erode
Star : Aswini Patham 1
Raasi : Mesham
Lagnam : Kadagam

Height / Weight : 5'60" / 55 Kgs
Community : Hindu – Sengunthar Mudhaliyar
Educational Qualification : M.B.B.S (Presently studying M.D Psychiatry 1st year in MMC, Chennai)
Salary : Rs.38,000/ month (Stipend)
Father Name : M.Periyasamy (Late)
Powerloom spares Whole sale dealer
Mother Name : P.Chitra, House wife
Siblings details : One Elder Brother - Married
P.Gokul B.E (Marine Engineer)
Wife K.Priyadharshini M.Sc M.Phil (Home maker)
Daughter : Diskha gokul
Address : 10/2, Akilmedu 4th street, Sait Colony, Erode – 638001
Contact No : **9486063321, 9443713962, 9790665712**
Partner Preference : M.B.B.S, M.D, M.S; Good family background

	சந் கே		செ மா
சனி	இராசி		ல
			சூ பு
யுரே நெப்	புளூ	கு ரா	சு

ல	சந்	ரா மா	சூ
கு சனி	நவாம்சம்		புளூ
செ			சு
யுரே நெப்	கே	பு	

15/20545/19.04.2021

கேது திசை இருப்பு 5 வருடம் 4 மாதம் 1 நாள்

மணமகன் தேவை

பெயர் : **B.அனுஷா**

பிறந்த தேதி : 06.03.1997 வியாழக்கிழமை காலை 11.05 A.M. குடியாத்தம்

படிப்பு : B.E., M.E., (CSE).

நட்சத்திரம் : திருவோணம் 1ம் பாதம்

ராசி, லக்னம் : மகரம், ரிஷபம்

நிறம், உயரம் : சிகப்பு, 168 செ.மீ.,

தந்தை பெயர் : திரு.S.பூபதி

தாயார் பெயர் : திருமதி.D.மைதிலி, இல்லத்தரசி

உடன் பிறந்தோர் : அக்கா 1 திருமணம் ஆனவர் M.R.ஐஸ்வர்யா, B.E., M.B.A., உதவி மேலாளர், LIC HFL, Chennai

முகவரி : நெ.15, T.K.M.நகர், புதுப்பேட்டை, குடியாத்தம் - 632 602, வேலூர் மாவட்டம்

எதிர்பார்ப்பு : மென்பொறியாளர், வங்கி மேலாளர், B.E., M.E., M.Tech., சிகப்பு வேலூர் மற்றும் அருகாமை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் நலம்.

மாமா : T.லோகேஷ், உதவி மேலாளர், BNP Paribas, Chennai

செல் : **99433 87116, 99445 20889**

சனி கே		ல	
பு சூ சு	இராசி		
கு சந்			
			செ ரா

பு செ	ல சூ சந்	கு	
சு ரா	நவாம்சம்		
			கே
	சனி		

07/20581/13.05.2021

சந்திர திசை இருப்பு 8 வருடம் 3 மாதம் 22 நாள்

Name : **K.P.ARATHI**

Date of Birth: 01.11.1990, 9.15 A.M. Trichy

Rasi, Lagnam : Meenam, Virichigam

Star : Revathi

Height, Weight, Complexion: 157Cm., 60 Kg, Fair

Education : B.E., (EEE) M.E., (Applied Electronics)

Work Profile : Worked for 2 yrs as a guest lecturer in Govt. College of Engineering Srirangam, Trichy & now preparing for TRB exam

Father : Dr.K.Palaniappan, M.A., M.Phil., Ph.D., Rtd. Professor, Periyar EVR Govt. College, Trichy

Fathers Native : Rasipuram, Namakkal

Contact No's: **99421 34247, 95246 86710** (Whatsapp)

Address : S5, Sarodhanlakshmi Apt., 29 Heber Road, Palakkarai, Trichy - 01

Mothers Name : P.Manonmani, Home Maker

Mothers Contact : **96887 25657**

Mothers Native : Trichy

Siblings : Brother 1 (Younger & Unmarried) K.P.Aravind, B.E., MBA., Cell: **95246 86710** Saggezza - Bengaluru

Properties : 1 Own house, 3 Empty plots

Expectations : Groom from any Professional qualification with good family background

பரிகார செவ்வாய். சுத்த ஜாதகம் பொருந்தும்.

சந்		செ	
	இராசி		கு கே
ரா			
சனி மாந்	ல	சூ பு சு	

ல ரா			பு மாந்
சூ	நவாம்சம்		
சந் சு			செ
கு			சனி கே

03/20567/21.04.2021

புதன் திசை இருப்பு 11 வருடம் 4 மாதம் 2 நாள்

மணமகன் தேவை

பெயர் : **Dr.U.வித்யா**

பிறந்த தேதி : 22.08.1992 ஆவணி மாதம் 6ஆம் நாள் மாலை 6.24 மணி, காஞ்சிபுரம்

நட்சத்திரம் : ரோகிணி 4ஆம் பாதம்

ராசி, லக்னம் : ரிஷபம், கும்பம்

நிறம், உயரம் : மாநிறம், 146 செ.மீ.,

இரத்த வகை : B+ve

படிப்பு : B.H.M.S. (Homeopathy Doctor)

பணி : Own Clinic in Kanchipuram

தந்தை பெயர் : அ.உலகநாதன், பெப்ஸி கம்பெனி, மாமண்டூர்

தாயார் பெயர் : தி.இராஜேஸ்வரி, தலைமையாசிரியர், அரசு தொடக்கப்பள்ளி, காஞ்சிபுரம்

உடன் பிறந்தோர் : தங்கை 1 (B.E., Computer Science) Work in Chennai

முகவரி : நெ.66, வைகுந்தவல்லி நகர், ஓரிக்கை, காஞ்சிபுரம்

பூர்வீகம் : சன்னதி தெரு, திருவத்திபுரம் (செய்யார்)

செல் : **99521 84696, 95975 72939**

மின்னஞ்சல் : dr.vidhubhms@gmail.com

		சந் செ	கே
ல	இராசி		பு
சனி			சு கு சூ
ரா			

	சனி ரா	சூ	
பு	நவாம்சம்		சந்
			செ
கு	ல சு	கே	

18/20594/26/06/2021

சந்திர திசை இருப்பு 1 வருடம் 1 மாதம் 0 நாள்

பெயர் : **Dr.P.மீனா,** M.B.B.S., M.D.,

பிறந்த தேதி : 05.06.1993, இரவு 8.53 மணி, ஜெயங்கொண்டம்

நட்சத்திரம்: மூலம் 2ம் பாதம்

ராசி, லக்னம் : தனுசு, தனுசு

நிறம், உயரம் : மாநிறம், 170 செ.மீ.,

படிப்பு : M.B.B.S., M.D., (Anaesthesia) 2ம் ஆண்டு அரசு கல்லூரியில் படித்து வருகிறார்

வருமானம் : 8,00,000/-வருடம் (Service PG)

தந்தை பெயர் : மு.புகழேந்தி

தாயார் பெயர் : பு.தனமணி

உடன் பிறந்தோர் : அண்ணன்கள் 2 திருமணமானவர்கள் 1.P.வெங்கடேசன், B.E., அரசு பணி, தொழிலாளர் துறை, 2.P.மகேஷ், B.E., மென்பொறியாளர், USA

முகவரி : எண்:15B1, 6வது தெரு, செங்குந்தபுரம், ஜெயங்கொண்டம், அரியலூர் (மா) - 621 802

செல் : **93626 70130** (தந்தை), **81444 05519** (அண்ணன்)

மின்னஞ்சல் : embvenk@gmail.com

எதிர்பார்ப்பு : M.B.B.S., (or) M.D., (or) M.S. படித்த மருத்துவர்

	சு	சூ கே	பு
	இராசி		செ
சனி			
ல சந்	ரா		கு

	கு	சந் சு	கே
செ	நவாம்சம்		சூ
பு			
ரா	ல		சனி

20/20595/19.06.2021

கேது திசை இருப்பு 4 வருடம் 8 மாதம் 4 நாள்

மணமகன் தேவை

பெயர் : **G.அபிராமி**
படிப்பு : M.S., (O&G), Final Year
பிறந்த தேதி : 11.05.1994, புதன் இரவு 10.59 (22.59) திருப்பத்தூர்
நட்சத்திரம் : கிருத்திகை 4ம் பாதம்
ராசி, லக்னம் : ரிஷபம், தனுசு
நிறம், உயரம், எடை : மாநிறம், 164 செ.மீ., 55 கிலோ

பணி : Institute of Obstetrics and Gynecology, Egmore, Chennai
வருமானம் : 45,000/-மாதம்
உடன் பிறந்தோர் : அண்ணன் 1 திருமணமானவர் Dr.G.Prasanna, M.S., Mch., (SGE), Global Hospitals - Perumpakkam, Chennai. Liver Transplant Team, Dr.R.சாம்பவி லட்சுமி, M.S., (O&G), Working in Balaji Medical College Hospital, Chennai
தந்தை பெயர் : P.V.கோபால் (நினைவில்) ஜலகண்டாபுரம், சேலம் மாவட்டம்
தாயார் பெயர் : ஜெயந்தி கோபால்
தொடர்பு கொள்ள : T.C.அப்பு முதலியார் - பெரிய தள்ளப்பாடி ஊத்தங்கரை **94435 66755** (தாத்தா), S.N.கோதண்டம், திருப்பத்தூர் **94435 16116** முன்னாள் தலைமை பொறியாளர் TNEB
எதிர்பார்ப்பு : M.D., M.S., Mch.,
மின்னஞ்சல் : snkothandam@gmail.com

செ	சூ	பு சந் கே சு	
சனி	இராசி		
ல	ரா	கு(வ)	

பு செ சந் சனி			
கு(வ)	நவாம்சம்		ரா
கே			சு
ல சூ			

சூரிய திசை இருப்பு 0 வருடம் 10 மாதம் 8 நாள்

21/20602/29,06.2021

பெயர் : **இர.சு.ஆர்த்தி**
படிப்பு : M.Sc., (Deglutology), BASLP Speech and Swallowing Therapist.
பிறந்த தேதி: 13.09.1995, புதன்கிழமை இரவு 7.22 மணி
நட்சத்திரம் : பரணி 2ம் பாதம்
ராசி : மேஷம்
நிறம்,உயரம் : மாநிறம், 160 செ.மீ.,

பணி : தனியார் மருத்துவமனை, கோயம்புத்தூர்
வருமானம் : 40,000/-மாதம்
தந்தை பெயர் : இரா.இரவிச்சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், திருச்சிராப்பள்ளி
தாயார் பெயர் : ரெ.சுமதி, இடைநிலை ஆசிரியை, அ.மே.நி.பள்ளி, திருச்சிராப்பள்ளி - 15
உடன் பிறந்தோர் : Ar.இர.சு.பிரீத்தி, கட்டிட எழில் கலைஞர் (Architect) B.Arch., திருச்சிராப்பள்ளி
முகவரி : பிளாட் எண் - 8ஏ, மாரியம்மன் அவென்யூ, ஜெய நகர் விரிவாக்கம், கருமண்டபம், திருச்சிராப்பள்ளி - 620 001
பூர்வீகம் : மருதூர், பொன்பரப்பி (வழி), அரியலூர் (மா)
தொடர்புக்கு : இரா.இரவிச்சந்திரன்- **94421 17243**, ரெ.சுமதி - **94868 15439**, பெ.ரெங்கநாதன் - **90470 17243**
எதிர்பார்ப்பு : படித்த பணியிலுள்ள வரன் தேவை.

ல	சந் கே		
சனி	இராசி		
			சூ
	கு	செ ரா	பு சு

சனி	பு	கே	
	நவாம்சம்		
செ சு			
	ல கு சூ ரா		சந்

22/20603/29.06.2021

மணமகன் தேவை

பெயர் : **R.நிவேதா**

பிறந்த தேதி : 19.12.1991, 16:32 மணி, திருப்பத்தூர்

நட்சத்திரம் : கிருத்திகை (பரிகார செவ்வாய்)

ராசி, லக்னம் : ரிஷபம், ரிஷபம்

குலதெய்வம் : அங்காளம்மன்

கோத்திரம் : சிவகோத்திரம்

நிறம், உயரம், எடை : வெள்ளை, 156 செ.மீ., 57 கிலோ

படிப்பு : B.E., MBA.,

தந்தை பெயர் : S.ரமேஷ்பாபு, நகை வியாபாரம்

பூர்வீகம் : காவேரிப்பட்டிணம்

தாயார் பெயர் : P.விமலா, தலைமை ஆசிரியை

உடன் பிறந்தோர் : இளைய சகோதரர்கள் 2

செல் : **98949 03889, 95006 73678**

முகவரி : 31/18, பிள்ளையார் கோவில் தெரு, காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி

சொத்து விபரம் : சொந்த வீடு, நிலங்கள், நல்ல வசதி உண்டு

எதிர்பார்ப்பு : படித்த, நல்ல குணமுள்ள குடும்பம், சமமான வசதி

		ல / சந்	கே
	இராசி		
சனி			கு
சூ ரா	செ பு	சு	

கே	சூ சனி சு	ல	
சந்	நவாம்சம்		
செ			
	பு	கு	ரா

01/20578/07.05.2021

சூரிய திசை இருப்பு 1 வருடம் 4 மாதம் 19 நாள்

பெயர் : **G. பிரியதர்ஷினி**

பிறந்த தேதி : 06.12.1996 தாது வருடம் கார்த்திகை மாதம் 20ஆம் தேதி வியாழக்கிழமை இரவு வெள்ளிக்கிழமை காலை 5.50 மணி சுபஜெனனம்

நட்சத்திரம் : அஸ்தம்

ராசி / லக்னம் : கன்னி / விருச்சிகம்

நிறம் : சிகப்பு

ஜாதி : செங்குந்த முதலியார்

படிப்பு : B.Sc., MBA

தந்தை பெயர் : N.கணேசன், NLC - Sr. Foreman

தாயார் பெயர் : G.லெட்சுமி

உடன்பிறந்தவர்கள் : மூத்தவர் திருமணமானவர் (அக்கா) திவ்யா BE - மகேஷ்குமார்BE.,MBA., Bangalore

சொத்து விபரம் : 2 பிளாட் உள்ளது. திருச்சியில் வீடு உள்ளது.

தொடர்பு முகவரி : 153-F - Type - 1 குவாட்டர்ஸ் வட்டம் - 5, நெய்வேலி - T.S. கடலூர் பூர்வீகம் பொன்பரப்பி, அரியலூர் மாவட்டம்.

செல் : **94422 56702, 94885 45845**

எதிர்பார்ப்பு : நல்ல குடும்பம், நல்ல வேலை.

கே			
சனி	இராசி		
			செ
பு கு	ல / சூ	சு	சந் ரா

ரா	சு		பு சனி
	நவாம்சம்		சந்
சூ			
ல / கு		செ	கே

சந்திர திசை இருப்பு 0 வருடம் 6 மாதம் 23 நாள்

மணமகன் தேவை

பெயர் : **S.உமாமகேஸ்வரி**

பிறந்த தேதி : 28.03.1996, பங்குனி மாதம் 15ம் நாள் மதியம் 12.55 மணி

நட்சத்திரம் : புனர்பூசம்

ராசி, லக்னம் : மிதுனம், மிதுனம்

நிறம், உயரம் : சிகப்பு, 165 செ.மீ

படிப்பு : B.E., (ECE),

பணி : சிட்டி யூனியன் பேங்க், சென்னை

வருமானம் : ரூ. 2-3 Lskhs

இனம் : செங்குந்தர் (கைகோளர்)

தந்தை பெயர் : S.சக்திவேல்

தாயார் பெயர் : S.கலைச்செல்வி

உடன் பிறந்தோர் : இளைய சகோதரி 1 MCA., இளைய சகோதரர் 1 B.E.,

முகவரி : 79/B, பாவா கோபால்சாமி தெரு, திருவாரூர் - 610 001

எதிர்பார்ப்பு : B.E.,க்கு சமம். அதற்கு மேல், அரசு வேலை, தனியார் துறையில் பணியில் உள்ளவர். ஐந்து வருட வயது வித்தியாசம் மிகாமல். நல்ல குடும்ப பின்னணி உள்ளவர்.

செல் : **94434 48725** (Whatsapp)

சூ கே பு செ	சு		ல / சந்
சனி	இராசி		
கு			ரா

		ல /	சந் சனி
பு	நவாம்சம்		ரா
கே			
சு	சூ	செ கு	

குரு திசை இருப்பு விபரம் 7 வருடம் 3 மாதம் 25 நாள்

வாரியார் அருளமுதம்

★ சிறியவர் என்று யாரையும் அலட்சியமாக நினைக்கக் கூடாது. உயர்ந்த அரிசி, எளிய உமியைக் கொண்டே, சாதாரண மண்ணில் முளை விடுகிறது.

★ ஆரோக்கியமான வாழ்க்கைதான், மனிதனுக்கு மிகப்பெரிய பாக்கியம்.

★ மனதை அடக்கி வைப்பதுதான் உலகின் கஷ்டமான காரியம்.

★ நம்மை பாவம் செய்யாமல் தடுப்பவன் எவனோ அவனே நண்பன்.

★ உலகில் எல்லாம் தெரிந்தவர் எவருமில்லை. எதுவும் தெரியாதவர் என்றும் எவரும் கிடையாது.

★ உன்னை நீ காத்துக்கொள்ள விரும்பினால். எந்த நிலையிலும் கோபம் உன்னை கட்டுப்படுத்த அனுமதிக்காதே.

★ வயலில் தூவப்படும் சில விதைகளே, பல ஆயிரம் மடங்கு பயிர்களை திருப்பித் தருகின்றன. அதேபோல, ஒருவர் செய்யும் நன்மையும் தீமையும் அவர்கள் செய்ததற்கு ஏற்ற வகையில், பல மடங்காகப் பெருகி, அவரிடமே திரும்ப வந்துசேரும்.

மங்கலம் பொழியும் மணவிழா

நெய்வேலி கிளை செங்குந்த மகாஜன சங்கத்தின் செயலாளர்
திரு.K. ரெங்கநாதன் – திருமதி. தனலட்சுமி ரெங்கநாதன் இவர்களின் அன்பு மகள்
R.அபிநயா B.Tech, Alten India Chennai.-விற்கும்
பெரம்பலூர் திரு.N. சத்தியமூர்த்தி திருமதி.கமலம் சத்தியமூர்த்தி அவர்களின் அன்பு மகன்
S.முத்துக்குமார் B.E., Mphasis Chennai. அவர்களுக்கும்
பெரம்பலூர் அருள்மிகு ஸ்ரீ மதனகோபால சுவாமி திருக்கோயில் 23.06.2021 புதன்கிழமை அதிகாலை மிகவும் சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பெரம்பலூர் கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில் மணமக்கள் வரவேற்பு நிகழ்ச்சியும் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. கொரோனா காலமாக இருப்பதால் அரசு வழிகாட்டு முறைகளுக்கு உட்பட்டு திருமணம் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்த நேரில் வரமுடியாத காரணத்தால், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் **திரு. K.P.K. செல்வராஜ்** அவர்களும் பொதுச்செயலாளர் **திரு.R.P.குமரகுருபரன்** அவர்களும் தொலைபேசி வாயிலாகவும், வாட்ஸ்அப் மூலமாகவும் வாழ்த்துக்களை தெரிவித்தனர். கடலூர் மாவட்ட சங்கத்தின் சார்பாக தலைவர் பெண்ணாடம் திரு.ஆ.ராஜவேலு, பொதுச் செயலாளர் திரு.P. கோவிந்தசாமி, பொருளாளர் திரு.T.ராஜாமணி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் திரு.P.T. இராஜன், திரு.P.K. இரத்தின சபாபதி, திரு.A.அறிவழகன், நெய்வேலி கிளை சங்க சிறப்புத் தலைவர் திரு.A.M.மாணிக்கம், சிறப்பு செயலாளர் திரு.V.பழனியப்பன், தலைவர் திரு.M.மதியழகன், பொருளாளர் திரு.K.ராமசாமி மற்றும் கிளை சங்கத்தின் அனைத்து பொறுப்பாளர்களும் சங்க உறுப்பினர்களும் வாட்ஸ்அப் மூலமாக வாழ்த்துக்களை தெரிவித்தனர். மணமக்களை நேரிலும், தொலைபேசி மற்றும் வாட்ஸ்அப் மூலமாகவும் வாழ்த்திய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

K.ரெங்கநாதன் Dy.Exe.Engineer/NLCIL
மற்றும் குடும்பத்தினர்

செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியாக ரூ.5000/–
தலைமைச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் முன்னாள் தலைவர் திரு.J.சுத்தானந்தன் அவர்களுக்கு 11வது நினைவஞ்சலி

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் தலைவர் K.P.K.செல்வராஜ் அவர்களின் அஞ்சலி செய்தியுடன், அரண்மனைக்காரன் தெருவில் உள்ள செங்குந்தர் மாளிகையில் உள்ள முன்னாள் தலைவர் திரு.J.S. அவர்களின் திரு உருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள திரு. J.சுத்தானந்தன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு திரு. J.S. அவர்களின் 11வது நினைவு தினத்தை முன்னிட்டு, தெ.செ.ம.சங்கப் பொதுச்செயலாளர் R.P.குமரகுருபரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, 11 மரக்கன்றுகள் பள்ளி வளாகத்தில் நடப்பட்டன.

கூட்ட அரங்கில் திரு. J.S. அவர்களின்

திருஉருவப்படத்துக்கு ஆள் உயர மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பள்ளியின் முதல்வர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவிற்கு தெ.செ.ம.சங்கப் பொதுச்செயலாளர் R.P. குமரகுருபரன், தலைமை ஏற்று திரு. J.S. அவர்களின் பண்பு நலனையும் அவர்தம் ஆற்றிய தொண்டினையும் விவரித்து சிறப்புரை ஆற்றினார். R. காந்தி பொருளாளர், தமது நினைவஞ்சல் செய்தியை தொலைபேசியில் தெரிவித்தார். தலைமைச் சங்க துணை பொதுச்செயலாளர் K.சுந்தரமூர்த்தி மலரஞ்சலி செலுத்தினார்.

மைலாப்பூர் செங்குந்த மகாஜன சபை நிர்வாகிகள் பூபதி, M.S. கார்த்திகேயன் திருவொற்றியூர் பெருநகர செங்குந்த சங்கத் தலைவர் பிரபு, பள்ளியின் கணக்காளர் திருமதி. இரமா ஆசிரியைகள் ஞான

தீபா, முத்துலட்சுமி மற்றும் பணியாளர்கள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நெசவாளர் நேசன் திரு. J.சுத்தானந்தன் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல் 25.06.2021 அன்று ஆம்பூர் கஸ்பா 'A' சுந்தர விநாயகர் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. திருப்பத்தூர் மாவட்ட செ.ம.சங்கத்தின் தலைவர் K.சம்பத்குமார், மாவட்ட துணைச் செயலாளர் P.ஜீவானந்தம், CMG.ரவி, நகரத் தலைவர் PG.ரகுராமன், தண்டபாணி, ரமேஷ், தேவராஜ் மற்றும் செங்குந்த சொந்தங்கள் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மேனாள் தலைவர் செங்குந்தர் குல விடிவெள்ளி உத்யோகரத்னா நெசவாளர் நேசன் தெய்வத்திரு. ஜெ.சுத்தானந்தன் அவர்களின் 11ம் ஆண்டு நினைவு நாளில் மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம் சார்பில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கப் பொருளாளரும் மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கத்தின் தலைவருமான இரா.காந்தி, செயலாளர் பா. ரவீந்திரன், பொருளாளர் பொ.திருநாவுக்கரசு, மாநில செயற்குழு உறுப்பினர்கள் N. உதயகுமார், S.ஆண்டியப்பன் துணைத் தலைவர் A.ராமசுப்பிரமணி, துணை செயலாளர் K.காளிமுத்து, G.ரமேஷ் மற்றும் திருமதி. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெசவாளர் நேசன் J.S. அவர்களுக்கு 11ம் ஆண்டு நினைவு நாள்

காஞ்சிபுரம் மாவட்டம் தேசுமுகிப் பேட்டை கிளையின் சார்பாக 25.06.2021 அன்று நெசவாளர் நேசன், உத்யோக ரத்னா திருமிகு J.சுத்தானந்தன் அவர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட தலைவர் சு. பூபதி, த.ச.செ. உறுப்பினர் வ.சம்பத் அவர்களும், புரவலர் வேணுகோபால் மற்றும் கிளை சங்க உறுப்பினர்கள், செங்குந்த உறவினர்கள் கலந்து கொண்டனர்.



உத்யோக் ரத்னா, நெசவாளர் நேசன்
ஜெ.சுத்தானந்தன் அவர்களின்
11ம் ஆண்டு நினைவு நாள்

சென்னைப் பெருநகர் சங்கம் சார்பில் J.S. அவர்களுக்கு 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சைதாப்பேட்டை, சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க அலுவலகக் கட்டடத்தில், 25.06.2021 வெள்ளிக்கிழமை அன்று நம்குலத் தோன்றல், உத்யோகரத்னா, நெசவாளர் நேசன், தெய்வத்திரு. J.சுத்தானந்தன் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் D.ஆறுமுகம் செங்குந்தர் தலைமையேற்று வரவேற்புரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் S. தங்கராஜ் செங்குந்தர் இறைவணக்கம் பாடினார். J.சுத்தானந்தன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு வருகை தந்த அனைவரும் மலரஞ்சலி செலுத்தினர்.

பின்னர், பெருந்தொற்று காரணமாகவும், உடல் நலக் குறைவு காரணமாகவும் இயற்கை எய்திய, திருவல்லிக்கேணி S.சங்கர் செங்குந்தர், தர்மன் செங்குந்தர், சைதாப்பேட்டை மேற்கு மாம்பலம் V. இந்திரஜித் செங்குந்தர், திருக்காரணி பூபதி செங்குந்தர், கூடியம்மன்பேட்டை நடனராஜன் செங்குந்தர், திருக்காரணி க. கிட்டு செங்குந்தர், திருமழிசை செல்வராஜ் செங்குந்தர், O.சுரேஷ் செங்குந்தர், மேலும் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் D. ஆறுமுகம் செங்குந்தர் அவர்களின் திருமகனார் A. ஆனந்தன் செங்குந்தர் ஆகியோரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவட்டத் தலைவர் D. ஆறுமுகம் செங்குந்தர், சைதாப்பேட்டை S. தங்கராஜ் செங்குந்தர், திருமழிசை S.ஜெயக்குமார் செங்குந்தர், திருவல்லிக்கேணி S.D. பழனி செங்குந்தர் ஆகியோர் J.S. அவர்களின் சிறப்புகளைக் கூறி அவருக்குப் புகழஞ்சலி செலுத்தினர். இறுதியில் சைதாப்பேட்டை N.G. சுப்பிரமணி செங்குந்தர் நன்றியுரை ஆற்றினார். பொருளாளர் S. ரமேஷ் செங்குந்தர், திருமழிசை T.V.கருணாகரன் செங்குந்தர், S. குருமூர்த்தி செங்குந்தர், அனகாபுத்தூர் மனோகரன் செங்குந்தர், அழகேசன் செங்குந்தர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இறுதியில் அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. தொற்று பரவாமல் இருப்பதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.

வேலூர் சங்கம் சார்பில் J.S. அவர்களுக்கு 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வேலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்க சார்பில் 25–06–2021 அன்று நெசவாளர் நேசன் – உத்யோகரத்னா தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் முன்னாள் தலைவர் திரு. ஜெ.சுத்தானந்தன் அவர்களின் மலரஞ்சலி குடியாத்தம் பிச்சனூர் வேலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்க அலுவலகம் முன்பு அனுசரிக்கப்பட்டது.

வேலூர் மாவட்ட தலைவர்/ தெ.செ.ம.சங்கத் துணைத்தலைவர் சி.என். தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைமையில் ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்குதல் நடைபெற்றது. வாரியார் அறக்கட்டளை மாவட்ட செயலாளர் ஆசிரியர் எம். தண்டபாணி அவர்கள் திரு.J.S. அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தார். மாவட்ட செயலாளர் எம்.ரவி, மாவட்ட இளைஞரணி தலைவர் எஸ்.கார்த்திகேயன், மாவட்ட நெசவாளரணி பாலாஜி, நகர தலைவர் ஏ.கருணாகரன், நகர பொருளாளர் தமிழ்மணி, துணைச்செயலாளர்கள் மனோகரன், கமலநாதன், இணைச்செயலாளர் ராஜேந்திரன், நகர துணைத்தலைவர் தேவராஜ், கிளைச்சங்க நிர்வாகிகள் காளியம்மன் பட்டி கிளை தலைவர், ஜி.தேவராஜி, கோவிந்தப்ப நகர் கிளை தலைவர் ஜோதி இந்திராநகர் கிளை பன்னீர், வடிவேல் நேருஜிநகர் கிளை மகாலிங்கம் மற்றும் தீர்த்தம், தர்மலிங்கம், சதாசிவம், மாவட்ட ஆசிரியர் அணி அமைப்பாளர் ஜெகதீசன், குஷி ஓட்டல் பூபாலன் மற்றும் சமுதாய சான்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்

செங்குந்தர் மாளிகை : 044 - 25226852
தெ.செ.ம.சங்கம் : 044 - 42957999
வள்ளல் சபாபதி பள்ளி : 044 - 26680482
செங்குந்தமித்திரன் : 97911 17261

பொதட்டூர்பேட்டை சங்கம் சார்பில் J.S. அவர்களுக்கு 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நெசவாளர் நேசன் திரு. ஜெ.சுத்தானந்தன் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு 25–06–2021 அன்று பொதட்டூர்பேட்டை காந்தி சிலை அருகில் நகரத் தலைவர் A.R.சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் M.R.தங்கவேல், P.N.மாணிக்கம், N.K.நரசிம்மன், M.V.தேவநாதன், S.M.குப்புசாமி, R.G. விஜயன், E.K.உதயசூரியன், P.V.பார்த்திபன், M.C.ஜம்புலிங்கம், M.S.வேலன், A.T.தியாகராஜன், A.V.சக்ரப்பன், M.D.ராம்குமார், O.K.N.சிவா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நகரச் செயலாளர் D.R.மணி ஏற்பாடு செய்திருந்தார்.

SRI GURU SARVA™
INSTITUTE OF MANAGEMENT
A Professionalised Gurukulam for Students | Full Time Classes
An ISO 9001 : 2015 Certified Educational Institute
CA ACADEMY
ஆடிட்டிங் படிப்பிற்கான முழு நேர கல்வி நிறுவனம்

OUR ACHIVEMENTS
- CA-CPT தேர்வில் திருப்பூர் மாவட்ட அளவில் தொடர்ந்து 13 முறை முதலிடம் பெற்று சாதனை மற்றும் 186/200 மதிப்பெண்கள் பெற்று தேசிய அளவிலும் சாதனை.
- CA-Foundation Nov - 19 தேர்வில் முதல் 5 இடங்கள் பெற்ற அனைவரும் "Distinction"–ல் தேர்ச்சி பெற்று சாதனை.
- CA-Foundation Nov - 18 தேர்வில் முதல் 6 இடங்கள் பெற்ற அனைவரும் "Distinction"–ல் தேர்ச்சி பெற்று சாதனை.
- CA-IPCC Inter பிரிவில் திருப்பூர் & கோவை மண்டல அளவில் ரேங்கிங்

செங்குந்த மாணவர்களுக்கு 50% கட்டண சலுகை

Eligibility: +2 (or) Any Degree. *Limited Seats Only.*

Near Old Bus Stand, TIRUPUR.
www.srigurusarva.org 96009 22888 0421 - 4246672
srigurusarva_caacademy_tirupur



உங்கள் கிட்னி நல்லா இருக்கிறதா? டயாலிஸஸ் செய்யாமல் பாதுகாப்பது எப்படி?

சர்க்கரை நோய், அதிக இரத்த அழுத்தம் (HBP), புகைபிடித்தல், மது அருந்துதல், வயதில் முதியவர்கள், அதிக உடற்பருமன் போன்ற குறைகள் உள்ளவர்கள்தான் அதிக அளவில் சிறுநீரகக் கோளாறுகளுக்கு ஆளாகின்றனர்.

சிறுநீரகக் கோளாறுகளுக்கு காரணங்கள்: மனஅழுத்தம், கவலை, அதிக BP மற்றும் சர்க்கரையின் அளவு அதிகமாக இருத்தல், வலி நிவாரண மருந்துகளை அதிகமாக சாப்பிடுதல், சிறுநீரகங்களில் நீர்கட்டிகள், அதிக புரதச்சத்துக்கள் உள்ள (animal protein) மற்றும் பொட்டாசியம் நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல், கிருமிகளால் சிறுநீரகங்கள் தாக்கப்படுதல், மேலும் ஆட்டோ இம்மியூன் நோய்களாலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுகின்றன. பாதித்த பிறகும் உப்பு, காரம், மசாலா பொருள்கள், மற்றும் உணவுக்கட்டுப்பாடு இல்லாமல் உண்பதாலும், மற்றும் சிறுநீரகங்களில் கற்கள் உருவாவதாலும் கட்டிகள் ஏற்படுவதாலும், பரம்பரை நோய்களாலும் கூட சிறுநீரகங்கள் செயல் இழந்து பாதிப்பு அடைகின்றன.

சிறுநீரகக் கோளாறுக்கான அறிகுறிகள் : முகம், கை, கால்களில் வீக்கம், அடிக்கடி விக்கல் ஏற்படுதல், பசியின்மை, அஜீரணம், வாந்தி, குமட்டல், உடலில் அரிப்பு, மயக்கம், தலைவலி, இரத்தசோகை, மலச்சிக்கல், நுரையுடன் சிறுநீர் கழித்தல், கை, கால்கள் நரம்பு வலியுடன் (cramp) இழுத்தல், உடல் எடை குறைதல், உடல் சோர்வு, கோபம் ஏற்படுதல், நாவறட்சி, இடுப்புவலி போன்ற உடல்நலக் குறைவுகளை சிறுநீரகங்களின் கோளாறுகள் என அறியலாம். மேலும் இரத்தத்தில் யூரியா, கிரியேட்டினைன், யூரிக் ஆசிட் அதிகமாகுதல் மூலமாகவும் பாதிப்பை அறியலாம். அதாவது சிறுநீரை நார்மலாக வெளியேற்ற முடியாமல் சிறுநீரகங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அடைப்பட்டும், சுருங்கியும் விடுகின்றன. இதனையே சிறுநிரகக் கோளாறு (Kidney Failure) என்கிறோம். இதுபோன்ற குறைகளுக்கு ஆரம்ப காலத்திலேயே இதனை உணர்ந்து தக்க சிகிச்சை எடுப்பதன் மூலம் நல்ல நிவாரணம் பெற்று சிறுநீரகக் கோளாறிலிருந்து விடுபெறலாம். மேலும் ஆலோசனைக்கும் பின்விளைவோ பக்க விளைவோ ஏற்படுத்தாத நலமூலிகை மருந்தினைப் பெறவும் அணுகவும்.

NATURE CURE
GINRC–INDIA

Dr.T.ASHOK KUMAR, M.D. (Ayurveda), M.Sc., (Yoga)
GANDHIJI NATURE CURE CENTRE
No.2C, Mandhia Apt (2nd Floor), 53, North Boag Road,
(Opp. State Bank of India), T.Nagar, Chennai – 600 017.
Phone : 9444041062, 9444631778 | www.gandhijinaturecure.com

தகவல்: பொதுவாக Creatinine 1.2 அளவு நார்மல் ஆகும். இந்த அளவுக்கு மேல் இருக்கும்போதே சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்பதை உணர்ந்து தக்க மருத்துவ ஆலோசனைப் பெற வேண்டும். ஆயூர்வேத மருந்துகள், இயற்கை உணவுகள், உணவு முறைகள், சூரியக்குளியல், உடற்பயிற்சி, இவைகளால் சிறந்த முறையில் உடல்நலக்குறைகள் நீங்கி நல்ல நிவாரணத்தை பெறமுடியும்.

குறிப்பு: மற்றும் சர்க்கரைநோய், சரும நோய்கள், புற்றுநோய், மூலம், பௌத்திரம், அல்சர், தைராய்டு பிரச்சினைகள், உடற்பருமன், தலைமுடி உதிர்தல், மூட்டுவலி, மனஅழுத்தம், BP, இரத்தசோகை, இருதயநோய்கள், கருப்பை, சினைப்பைக் கோளாறுகள், வெள்ளைப்படுதல், மற்றும் குழந்தைகளுக்கான ஞாபகசக்திப் பெறவும் சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படும்.

GINRC - INDIA MEDICAL FOUNDATION
(Regd. Trust)
Managing Trustee
Dr.J.V.G. SEKAR, BA., LLB., PGDUMS,

GANDHI INSTITUTE OF YOGA & NATUROPATHY
Correspondent & Trustee
DR. MADHURAM SEKAR, MA, DUMS, DHN

எங்களுடைய புத்தகங்களான: இல்லந்தோறும் இயற்கை உணவுகள்,
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், HEALTH AND NATURE வாங்கி படித்தும் பயன் பெறலாம்.

உங்கள் பக்கம்

அன்பும், பண்பும், ஆன்மீகமும், வீரமும், விவேகமும் நிறைந்த செங்குந்த சொந்தங்களுக்கு, வணக்கம்.

போராடிக் கொண்டே வாழாதீர்கள்
வாழ்க்கை அர்த்தமற்று கரைந்து விடும்..
வாழ்ந்து கொண்டே போராடுங்கள்..
வாழ்க்கை வசந்தமாகும்...!!

இதுதான் இப்பொழுது கொரோனா காலத்தில் நடந்து கொண்டிருக்கிறது. வாழ்க்கையை எவ்வளவு பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்கு கடந்த ஓராண்டு காலமாக நமக்கு இயற்கை உணர்த்திவிட்டது.

வாழ்க்கை என்பது கடவுள் நமக்கு வைக்கும் தேர்வு. வழக்கம்போல் தேர்வில் பல பேர் வெற்றி பெறுவதும், சில பேர் தோல்வி அடைவதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வெற்றி பெற்றவர்களில் சில பேர்கள் உச்சத்திலும் சில பேர் தொடக்கத்திலும் உள்ளார்கள், பரவாயில்லை. மொத்ததில் அனைவரும் ***பாஸ்.***

தோல்வி அடைந்தவர்களில் பல பேருக்கு தங்களது கேள்வித்தாள் தங்களுக்கானது என்று எண்ணாமல் அது பொதுவானது என்று நினைத்து பிறரைப் பார்த்து காப்பி அடித்ததினால்தான் தாங்கள் தோல்வியடைந்தோம் என்பதை கடைசிவரை அறிந்தவர்களில்லை. எனவேதான் இவர்கள் அனைவரும் ***பெயில்.***

கடந்த கொரோனா முதல் அலையின்போது இயலாதவர்களுக்கு வசதி வாய்ப்பு உள்ளவர்கள் அனைவரும் மனித நேயத்துடன் உதவி செய்தார்கள்.

தற்பொழுது இரண்டாவது அலையின்போது அந்த உதவிகள் சற்றே குறைந்தது, இந்நிலையிலும் உதவி செய்து வரும் செங்குந்த சொந்தங்களைப் பாராட்டுகிறேன்.

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் செங்குந்தரின் 2 வருட இளம் தளிர் **மித்ரா**, தண்டுவட தசைநார் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருடைய நோய்க்கு மருத்துவ சிகிச்சை பெற ரூபாய் 16 கோடி செலவாகும் என தெரிகின்றது.

இந்தத் தொகையை அவர்கள் குடும்பத்தாரால் செய்ய இயலாத நிலைமையில், உலகெங்கும் உள்ள நல் இதயம் படைத்த நன்கொடையாளர்களிடம் உதவிக் கரங்கள் நீட்டப்பட்டு, அவர்களும் தங்களால் இயன்ற நிதி உதவியை அனுப்பி வருகிறார்கள்.

நம்முடைய செங்குந்த சொந்தங்களும் என்னுடைய வேண்டுகோளை ஏற்று தங்களால் முடிந்தளவு உதவித் தொகையை அனுப்பி வருகிறார்கள். இந்த நல்ல பணியில் உங்களையும் இணைத்துக் கொள்ள அன்போடு வேண்டுகிறேன்.

மித்ரா மருத்துவ சிகிச்சை முடிந்து நல்ல முறையில் வாழ நம்மால் முடிந்ததை மனதார செய்வோமாக!

சில கனவுகளை நிஜமாக எண்ணி மகிழ்வதும்,
பல நிஜங்களை கனவாக எண்ணி மறப்பதும்தான் - வாழ்க்கை!!

மீண்டும் சந்திப்போம்
பிரியமுடன்...

KPK செல்வராஜ்

பாலாலய விழா

தஞ்சாவூர் மாவட்டம், தாராசுரம் ஸ்ரீ வீரபத்ரசுவாமி திருகோயிலின் மூன்று நிலை ராஜகோபுர பாலாலய விழா 17.06.2021 வியாழக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.

தஞ்சை மாவட்ட செங்குந்த மகாஜன சங்க துணைப் பொதுச்செயலாளர் சோலைமுத்து, தாராசுரம் கிளைச்சங்க தலைவர் ராஜேந்திரன், பொருளாளர் ரமேஷ், கவிஞர்.அய்யப்பன், சத்தியா, கோவி. ராதாகிருஷ்ணன், துரைராஜ், சரவணன், குருமூர்த்தி, ராஜசேகர், மோகனராமன், பாஸ்கர் ஸ்தபதி, ஒப்பந்ததாரர் தனபால், சசிகுமார், சுமதிராஜா மற்றும் கிராமவாசிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவத்திரு. அ.ஜீவானந்தம் அர்ச்சகர் ஆலய கண்காணிப்பாளர் ஸ்ரீவீரபத்ரசுவாமி திருகோயில் ஒட்டக்கூத்தர் ஜீவசமாதி தாராசுரம் ஒட்டக்கூத்தர் ஆன்மீக அறக்கட்டளை மற்றும் திருப்பணிக் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

அன்புடையீர் வணக்கம்

ஸ்ரீ ஒட்டக்கூத்தர் ஜீவசமாதி அடைந்துள்ள தாராசுரம் ஸ்ரீ வீரபத்ரசுவாமி திருகோயிலின் மூன்று நிலை ராஜகோபுரம் மிக பழமையான சிதிலமடைந்த நிலையில் உள்ளதால் திருப்பணி தொடங்குவது என திருப்பணி குழுவினரால் முடிவெடுக்கப்பட்டு, அது சம்பந்தமாக பாலாலயம் செய்யபட்டுள்ளது.

நமது செங்குந்த சொந்தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி மற்றும் உபயதாரர்கள் வரவேற்கிறோம்.

இங்ஙனம்

ராஜகோபுர திருப்பணி குழுவினர்

தொடர்புக்கு: **ஒட்டக்கூத்தர் ஆன்மீக கல்வி அறக்கட்டளை தாராசுரம்.**

86808 28922, 9486 844158

ஸ்ரீ கவிச்சக்கரவர்த்தி ஒட்டகூத்தர் குரு பூஜை விழா குழு அமைப்பு கூட்டம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் தாராசுரம் அருள்மிகு பத்ரகாளியம்மன் உடனுறை அருள்மிகு ஸ்ரீ வீரபத்ரசுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கவிச்சக்கரவர்த்தி ஒட்டகூத்தர் ஜீவசமாதியின் 831 ஆம் ஆண்டு குரு பூஜை விழா ஆலோசனைக் கூட்டம் 27–06–2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:30 மணி அளவில் தாராசுரம் நகர கிளைச்சங்கத்தின் சார்பாக நடைபெற்றது.

கூட்டம் தாராசுரம் கிளை சங்கத் தலைவர் D.இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. ஸ்ரீ கவிச்சக்கரவர்த்தி ஒட்டகூத்தர் குரு பூஜை விழாவை தாராசுரம் கிளைச்சங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்டு ஆண்டுதோறும் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

2. குரு பூஜை விழா நடத்துவதற்கு விழா குழு அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

விழா குழுவினர்கள்

விழாக்குழு கௌரவ தலைவர்களாக தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் K.P.K.செல்வராஜ் அவர்களும், தஞ்சை மாவட்ட செங்குந்தர் கல்விச்சங்கத் தலைவர் LION S.சிவா அவர்களும், நிர்வாகக் குழுத் தலைவராக S.சோலைமுத்து, துணைத் தலைவராக V.சுவாமிநாதன், செயலாளராக D.இராஜேந்திரன், துணைச் செயலாளராக P.ரமேஷ்குமார், பொருளாளர் M.முத்தையன் ஆகியோரும், உறுப்பினர்களாக M.சந்திரசேகரன், P.முத்துசிவானந்தம், J.இராஜசேகர், S.குருசாமி, A.சரவணகுரு, M.செவ்வராஜ், தாமரை மணிகண்டன், S.அய்யப்பன், T.ரவி ஆகியோரும் ஏகமனதாக நியமனம் செய்யப்பட்டார்கள்.

SENGUNTHAR ENGINEERING COLLEGE

(AUTONOMOUS)

Estd. 2001

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956

TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205,
TAMIL NADU, INDIA.

ISO 9001 REGISTERED

B.E.
CIVIL | CSE*
ECE* | EEE*
MECH*

MBA

Ph.D
CSE | ECE

TNEA 2617

M.E.
Structural Engg.
CSE |
VLSI DESIGN

SENGUNTHAR COLLEGE OF ENGINEERING

Estd. 2007

(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
An ISO 2001 : 2015 Certified Institution
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

GABCB

B.E.
MEDICAL ELECTRONICS ENGG.*
*Permanently Affiliated

ROBOTICS & AUTOMATION

B.Tech.
INFORMATION TECHNOLOGY

TNEA 2629

M.E.
COMM & NETWORKING
MEDICAL ELECTRONICS

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

Estd. 2017

Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)
Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

GABCB

D.PHARM. | **B.PHARM.**
Lateral Entry

For Admission Contact

Phone : 04288 - 254716, 255716, 253716, 255727

Cell : 93674 74849, 93600 53352

Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in

பாடல் - 18

***வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்ட, பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது, வெளிநிற்கவே.***

அம்மா தாயே, அபிராமி! தானே முயன்று இடப்பாகத்தை கவர்ந்து கொண்டு சிவபெருமானுடன் நீ மகிழ்ச்சியாக சந்தோஷமாக அழகாக காட்சி தரும் உங்கள் திருமணக் கோலம் என் உள்ளத்தினுள்ளே நிறைந்துள்ளது. ஆணவம், அகந்தை, பொறாமையை இல்லாமல் செய்து எனக்கு அருள்புரியும் உன் இரண்டு சிவந்த திருவடியானது மிகவும் கொடிய கருணை இல்லாத எமன் என்னை அழைக்க வரும்போது எனக்கு காட்சித்தர வேண்டும்.

பலன்: மரண பயம் அகலும்.

செவ்வி - அழகு அவ்வியம் - பொறாமை,
வெவ்விய காலன் - கருணை இல்லாத எமன்

அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

அன்னக்கொடி காந்தி
மதுரை.

பாடல்-19

***வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுள்ளமோ
ஒளிர்நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.***

அபிராமியே! உனது உருவத் திருமேனியை, வெளியிலே அனைவருக்கும் எளிதில் காட்சி தருகின்ற ஆகாயத்தை மற்றும் உனது மேலான எழில் வடிவமான விக்ரகத்தை தரிசித்து எனது கண்களும் (வெளிப்பார்வை) எனது இருதயமும் (உட்பார்வை) ஒப்பற்ற சந்தோஷம் அடைந்தன. அந்த ஆனந்த பிரவாகத்திற்கு எல்லை காணமுடியவில்லை. என் எண்ணத்தின் உள்ளே இறைவனை அறியும் அறிவு (மெய்ஞானம்) சந்தேகமற்று தெளிந்து பிரகாசிக்கின்றது. இவையெல்லாம் உன் திருவுள்ளமோ? பிரகாசிக்கின்ற நவசக்கரங்களில் பரந்து பிரிக்க இயலாவண்ணம் கலந்தவளே, அபிராமியே!

பலன்: மன நிம்மதி கிட்டும். மகிழ்ச்சி கிட்டும்.

களி - சந்தோஷம் ஒளி - பிரகாசம்
கோணம் - யந்திரம், ஸ்ரீ சக்கரம் உறைபவளே - பிரிக்க இயலா வண்ணம் கலந்தவளே.

- தொடரும்

கடலூரில் கொரோனா நிவாரண உதவிகள் வழங்கும் பணி

கடலூர் செங்குந்தர் திருமண மண்டபத்தின் இயக்குனர் மற்றும் முன்னாள் வேளாண் இணை இயக்குனர் K.ராசு அவர்களின் முயற்சியால் செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் T.இராஜாமணி, K.ராசு மற்றும் P.கோவிந்தசாமி ஆகியோரது உதவியால் கடலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் 01.06.2021 முதல் 23.06.2021 வரை ரூ.80,000/– மதிப்புள்ள நல உதவிகள் வழங்கப்பட்டன.

கடலூர், நகராட்சியில் பணிபுரியும், டிவிஷன் 6,திருப்பாதிரிபுலியூர் துப்புரவு தொழிலாளர்கள் 53 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500/– மதிப்புள்ள மளிகை பொருட்கள் ரூபாய் 26500/– க்கு வழங்கப்பட்டது.

கடலூர் தென்பெண்ணை ஆற்றங்கரையில் வசிக்கும் இருளர்கள் மற்றும் கடலூர் பொது மருத்துவமனையில் உள்ள பொதுமக்கள் 100 நபர்களுக்கும், கடலூர் கே.என். பேட்டை, எம்.என்.டி.என். முதியோர் இல்லத்தில் இருக்கும் 40 முதியோர்களுக்கும், கூலித்தொழிலாளர்கள் நிரம்பிய பகுதியான கடலூர், திருப்பாதிரிபுலியூர், நத்தவெளி பகுதியில் இரண்டு நாட்கள் சுமார் 200 நபர்களுக்கும், கடலூர், திருப்பாதிரிபுலியூர், சுப்பராயலு நகரில் இயங்கி வரும் "குளோபல் மனவளர்ச்சி குன்றிய இளைஞர்கள் மறுவாழ்வு இல்லத்தில்" 40 நபர்களுக்கும், கடலூர் அருகில் உள்ள புருகீஸ்பேட்டை செல்லும் வழியில் உள்ள காந்தி நகரில் வசிக்கும் கூலி தொழிலாளர்கள் குடும்ப உறுப்பினர்கள் 100 நபர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

கடலூர், திருவந்திபுரம் அருகில் உள்ள பிலாலி தொட்டி கிராமத்தில் குடும்பத்துடன் தங்கி தெருத்தெருவாக சென்று கைரேகை ஜோசியம் பார்த்து பிழைப்பு நடத்தி வரும் 11 குடும்பத்தினருக்கு, 10 நாட்களுக்கு தேவையான மளிகை பொருட்கள் மற்றும் ஒரு நாள் மதிய உணவும் வழங்கப்பட்டது. கடலூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் வேலையின்றி கஷ்டப்படும் மண்டபப் பணியாளர்கள், 19 நபர்களுக்கு, நபர் ஒன்றுக்கு ரூபாய் 500/ வீதம் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

18.06.2021 முதல் தொடர்ந்து ஐந்து நாட்கள் கபசுரகுடி நீர் சுமார் 900 நபர்களுக்கு வழங்கப்பட்டது. வடுகபாளையம் சாந்தம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லத்திற்கு ஒரு மூட்டை அரிசி வாங்குவதற்கு தொகை ரூபாய் 2000/– வழங்கப்பட்டது.

கடலூரில் தடுப்பூசி முகாம்

கடலூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் 17–6–2021 வியாழக்கிழமையன்று கொரானா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. மேற்படி முகாமை கடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. கோ. ஐயப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதுசமயம் கோவாக்சின் மற்றும் கோவிஷீல்டு ஊசி 357 பேர்களுக்கு போடப்பட்டது. இந்த விழாவில் கடலூர் செங்குந்தர் திருமண மண்டபத்தின் நிர்வாகிகளும் கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

No.25, HARRINGTON ROAD, CHETPET, CHENNAI - 600030.
Phone : 044 - 2668 0662, 4295 7999

COURSES OFFERED IN HIGHTER SECONDARY

I - Physics, Chemistry, Maths, Biology

II - Physics, Chemistry, Maths, Computer Science

III - Commerce, Accountancy, Economics, Business Maths

IV - Commerce, Accountancy, Economics, Computer Applications

ராகு அல்லது கேது தசை நடப்பவர்கள்

வழிபட வேண்டிய தெய்வமும்! செய்ய வேண்டிய பரிகாரமும்!

ஒரு மனிதன் பிறந்த நேரத்தில் இருந்து அவன் இறுதி காலம் வரை ஜோதிடத்தைப் பொறுத்தவரை 120 வருடங்கள் என கணிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நாம் பிறந்த நேரத்தில் நடக்கும் தசை என்ன? என்பதை பார்த்துக் கொள்ள வேண்டும். அதிலிருந்து சுழற்சியாக 120 வருடங்கள் வரை ஒவ்வொரு தசையாக வந்து செல்லும். ஒவ்வொரு தசை தொடங்கும் பொழுதும் அந்தக் கிரகங்கள் ஆட்சி செலுத்தி கொண்டிருக்கும் பொழுது மீதமுள்ள 8 கிரகங்களும் அந்த தசை முடிவதற்குள் குறிப்பிட்ட காலம் வரை ஆட்சி செலுத்தி விட்டு செல்லும். இதைத்தான் புத்தி என்பார்கள்.

அவ்வகையில் ராகு தசை, கேது தசை நடப்பவர்கள் பூர்வ, புண்ணிய அடிப்படையில் பலன்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் செய்ய வேண்டிய பரிகாரங்களும், வழிபட வேண்டிய தெய்வங்களும் பற்றிப் பார்ப்போம்.

ராகு தசை நடப்பவர்களுக்கு:

உங்களுடைய ஜாதகத்தின்படி நீங்கள் ராகு தசையில் இருந்தால் உங்களுக்கு நீங்கள் செய்த பாவ, புண்ணிய அடிப்படையில் நல்லது, தீயது என்று மாறி மாறி நடந்து கொண்டிருக்கும்.

ராகு தசை நடப்பவர்கள் நாகராஜர் மற்றும் துர்கை அம்மனை வழிபட வேண்டும்.

துர்கை அம்மனுக்கும், நாகராஜர் சிலைக்கும் நீல வர்ண வஸ்திரத்தை சாற்றி வழிபடுவது நல்ல பலன்களைக் கொடுக்கும். நீங்கள் இவ்வாறு செய்வதால் உங்களுக்கு புண்ணியத்தின் அடிப்படையில் நடந்து கொண்டிருக்கின்ற நல்லவைகள் அதிகமாகவும், பாவத்தின் அடிப்படையில் நடந்து கொண்டிருக்கின்ற தீயவைகள் குறைவாகவும் மாறும்.

ராகு திசை நடப்பவர்கள் கோமேதகம் அணியலாம். சனிக்கிழமையில் பாலும், மஞ்சள் பொடியும் கலந்து கொண்டு தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்யலாம். பால் பாயசம் நிவேதனம் வைக்கலாம்.

அர்ச்சனை செய்ய மந்தாரை மலரை பயன்படுத்த வேண்டும்.

சனிக்கிழமைகளில் தோலுடன் இழுக்கும் உளுத்தம் பருப்பை தானம் செய்ய வருமானம் பெருகும்.

பூனைகளுக்கு உணவளித்து வாருங்கள் செல்வ செழிப்பு உண்டாகும். தடைபட்டுக் கொண்டிருக்கும் விஷயங்கள் உடனே நிறைவேறும்.

கேது தசை நடப்பவர்களுக்கு:

உங்கள் ஜாதகத்தின் படி நீங்கள் இருக்கும் தசை கேதுவாக இருந்தால் விநாயகர், சாமுண்டி, நாகராஜர் ஆகிய தெய்வங்களை கட்டாயம் வழிபட வேண்டும். நாகர் சிலைக்கும், சாமுண்டி தேவி சன்னிதியிலும் சிவப்பு நிற வஸ்திரம் சாற்றி செவ்வாய்க்கிழமையில் சிவப்பு நிற மலர்களால் குறிப்பாக செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்ய நடக்க இருக்கும் நல்லவைகள் அதிகரிக்கும், தீயவைகள் குறையும் என்பது ஐதீகம். விநாயகர் சிலைக்கு அருகம்புல் மாலை சாற்றி, பாலபிஷேகம் செய்து வர நல்லது நடக்கும்.

கேது தசை நடப்பவர்கள் செவ்வாய்க்கிழமையில் பரிகாரங்கள் செய்வது நல்லது.

நீங்கள் வைடூரியம் அணிந்து கொண்டால் சிறப்பான பலன்கள் உண்டாகும்.

கேது தசை நடப்பவர்கள் நாய்களுக்கு உணவளிக்க நன்மைகள் உண்டாகும். மேலும் கொள்ளு தானம் செய்து வந்தால் அற்புதமான யோகங்கள் உண்டாகும்.

சிவப்புநிற வஸ்திரத்தை இயலாதவர்களுக்கு தானமாக வழங்குவதன் மூலம் கேதுவினால் ஏற்பட இருக்கும் தீமைகள் குறையும்.

ஒளிர்விடும் சூரியனையும், ஒளிபொருந்திய சந்திரனையும் மறைக்கும் ஆற்றல் நிழல் கிரகங்களான ராகு, கேதுவிற்கு உண்டு. ராகுவை போல கொடுப்பாரும் இல்லை, கேதுவை போல கெடுப்பாரும் இல்லை என்பார்கள்.

ராகு தசை நடப்பவர்களுக்கு புண்ணியத்தின் அடிப்படையில் திடீர் ராஜ யோகம் உண்டாகும்.

கேது தசை நடப்பவர்களுக்கு பாவத்தின் அடிப்படையில் தீராத கஷ்டங்களும் உண்டாகும். இவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள மேற்கூறிய பரிகாரத்தை செய்து பலன் பெறுங்கள்.

ஒவ்வொரு தசைகள் நடைபெறும் காலங்கள் எவ்வளவு?

கேது	–	7 வருடங்கள்
சுக்கிரன்	–	20 வருடங்கள்
சூரியன்	–	6 வருடங்கள்
சந்திரன்	–	10 வருடங்கள்
செவ்வாய்	–	7 வருடங்கள்
ராகு	–	18 வருடங்கள்
குரு	–	16 வருடங்கள்
சனி	–	19 வருடங்கள்
புதன்	–	17 வருடங்கள்

வாழ்த்துக்கள்

திருப்பூரை சேர்ந்த **திரு. P.அருள்செல்வம் செங்குந்தர் - திருமதி A.மஞ்சுளா** அவர்களின் மகன் **A.அருள் பிரனேஷ்,** திருப்பூர், விகாஸ் வித்யாலயா, வித்யாசாகர் குழுமத்தை சேர்ந்த **திரு. T.கவுரிசங்கர் செங்குந்தர் - திருமதி G.கவிதா** தம்பதியினர் மகள் **G.அனு** ஆகியோரின் திருமணம், காங்கயம் – வட்டமலை அங்காளம்மன் கோவிலில் கொரோனா விழிப்புணர்வு விதிமுறைகளுக்கு உட்பட்டு எளிமையாக நடத்தி, மீதமான பணத்தை நற்பணிகளுக்கு தர முடிவு செய்து திருமணம் முடிந்த கையோடு, மணமக்கள்

- திருப்பூர் அரசு மருத்துவமனை எதிரே உள்ள ரோட்டரி கொரோனா கேர் சென்டருக்கு – 5 லட்சம்
- பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கொரோனா மையத்திற்கு – 11 லட்சம்
- புஞ்சை புளியம்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் கட்டமைக்கப்படும் முதியோர் இல்லத்திற்கு – 2 லட்சம்
- திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்கம் சார்பில் பல்லடம் அரசு மருத்துவமனையில் உள்ள சிகிச்சை மையத்திற்கு ஐ.சி.யு., யூனிட் அமைக்க – 7.66 லட்சம்
- மருத்துவ செலவினங்களை எதிர்கொள்ள முடியாமல் தத்தளிக்கும் 8 குடும்பங்களுக்கு – 7 லட்சம்

என மொத்தமாக, **37.66 லட்சம்** ரூபாயை வழங்கினர்.

இந்த சேவைக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

M.P. நாச்சிமுத்து M. ஜெகநாதன் பொறியியல் கல்லூரி

சுத்தானந்தன் கல்வி நகர்,
சென்னிமலை, ஈரோடு - 638 112.

Phone : 04294 - 250242, 250220, 251617

E-mail : mpnmjec@mpnmjec.ac.in Visit us at : www.mpnmjec.ac.in

'உத்யோக் ரத்னா'
திரு. ஜெ. சுத்தானந்தன் B.Sc.
நிறுவனர்

Counselling Code
2713

'பாரத் வித்யா சிரோமணி'
Dr. வசந்தா சுத்தானந்தன் M.A., B.Ed.
தாளாளர்

B.E.

- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering

B.Tech. I.T.

M.E.

- CAD / CAM
- Computer Science and Engineering
- Power Systems Engineering
- Structural Engineering
- VLSI - Design

கல்விச் சேவையில் 35 வருடங்கள் MPNMJEC

M.B.A
M.C.A

Placement Record **394** Offers

தொடர்புக்கு : 98652 33600, 98655 33800, 98655 33700, 73736 44088

வித்தியாசமான தண்டனை

முன்னொரு காலத்தில் மன்மதபுரி நாட்டை சிம்மராஜா என்ற அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் அரசவையில், விகடகவி மகிழன் என்பவன் வேலை செய்து வந்தான். அவன் எப்போதும் அரசரை வேடிக்கையாக கேலி செய்து வந்தான். இதனால் அரசர் அவன் மீது கோபம் கொண்டார். அதனால் அவர் அமைதி குலைந்தது. படுக்கையில் படுத்த அவரால், தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தபடியே இருந்தார்.

கோபம் அடங்காத அவர் பற்களை நறநறவென்று கடித்தார். அருகிலிருந்த அரசி, “தூக்கம் வராமல் ஏன் இப்படித் துன்பப் படுகிறீர்?" என்று கேட்டாள். “அதற்கு காரணம் விகடகவி மகிழன் தான்!" என்றார் அரசர்.

“அரண்மனைக் கோமாளியா? அவன் மீதா இப்படிக் கோபம் கொண்டுள்ளீர். அவனை மன்னித்து விடுங்கள். உங்களை மகிழ்ச்சி படுத்தத்தான் அவன் அங்கே இருக்கிறான். அதற்காகத்தான் ஊதியம் வாங்குகிறான். நீங்கள் சிரிப்பதற்காக அவன் ஏதோ பேசி இருப்பான்" என்றாள்.

“நீ சொல்வது சரிதான். இருந்தாலும் அவன் வேலையை அவன் செய்வது இல்லை. என்னையே அடிக்கடி கேலி செய்கிறான். அதனால்தான் அவன் மீது கோபம்" என்றான்.

“உங்களை கேலி செய்யும் துணிவு அவனுக்கு வந்துவிட்டதா? அப்படி என்ன கேலி செய்தான்?"

“அதை உன்னிடம் சொல்ல வேண்டுமா?" என்று கோபத்துடன் கேட்டார்.

ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்

கீழே உள்ள இரண்டு படங்களுக்கும் இடையில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. ஒப்பிட்டுக் கண்டுபிடியுங்கள் குழந்தைகளே! விடைகள் அடுத்த பக்கத்தில்..

“உங்களை அவன் அவமானப்படுத்தி விட்டானா? நீங்கள் அவனை மன்னிக்க கூடாது. இந்த குற்றத்திற்காக, அவன் சாகத்தான் வேண்டும்" என்றாள் அரசி.

இதைக் கேட்ட அவர் ஆறுதல் அடைந்தார்.

“நானும் அப்படித்தான் நினைத்தேன். அவன் செத்தால்தான், மற்றவர்களுக்கு அது பாடமாக இருக்கும். யாரும் என்னைக் கேலி செய்யத் துணிய மாட்டர்" என்றார். அதன் பிறகு அவர் தூங்கத் தொடங்கினார்.

எப்படியோ அவரைத் தேற்றி விட்டோம் என்று நினைத்து அரசியும் தூங்கினாள். பொழுது விடிந்தது. எழுந்த அரசர் மகிழனை முதலில் அவமானப்படுத்த வேண்டும். பிறகு கொல்ல வேண்டும். "எப்படி அவமானப் படுத்திக் கொல்வது" என்று சிந்தித்தபடி இருந்தார்.

நல்ல திட்டம் ஒன்று அவருக்குத் தோன்றியது. அரசவைக்கு வந்த அவர் அரியணையில் அமர்ந்தார். வழக்கம் போல அங்கு வந்த மகிழன் அவரை வணங்கினான்.

“நன்றி கெட்டவனே! உனக்கு எவ்வளவு மதிப்பு தந்தேன்? நேற்று எல்லாரையும் சிரிக்க வைப்பதாக நினைத்து என்னை அவமானப்படுத்தி விட்டாய். இனிமேல் இப்படிச் சிரிக்க வைக்க நீ உயிருடன் இருக்கப் போவது இல்லை. உன்னை கொல்லப் போகிறேன்" என்று கோபத்துடன் கத்தினார் அரசர்.

“அரசே! நான் உங்களை அவமானப் படுத்துவேனா? நகைச்சுவைக்காக அப்படிப் பேசினேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான். “நீ பேசியதைக் கேட்டது போதும். இனி உன் பேச்சை யாரும் கேட்கப் போவது இல்லை" என்ற அவர் காவலாளி ஒருவனைப் பார்த்தார்.

“வீதியில் திரியும் நாய் ஒன்றை இங்கே இழுத்து வா" என்றார். எலும்பும் தோலுமாக

ஆறு வித்தியாசங்கள் விடை

1. மரத்தின் கிளை, 2. முதலையின் வால், 3. கரையில் உள்ள கல், 4. பூச்செடி, 5. மரத்தின் இலை, 6. குரங்கின் தலைமுடி

இருந்த நாய் ஒன்றைப் பிடித்து, இழுத்துக் கொண்டு வந்தான்.

தெரு நாயை அரசர் ஏன் இழுத்து வரச் சொன்னார் என்பது விகடகவி மகிழனுக்குப் புரியவில்லை.

"அந்த நாயை வைத்து அவர் என்ன தண்டனை தரப் போகிறார்? ஒன்றும் புரிய வில்லையே" என்று எல்லாரும் குழம்பினர்.

"முட்டாளே! இந்தத் தெரு நாய்க்கும், உனக்கும் அதிக வேறுபாடு இல்லை. இந்த நாயை எங்கள் கண் முன்னால் நீ கொல்ல வேண்டும். அதே முறையில் நீயும் சாகப் போகிறாய்" என்றார்.

இதைக் கேட்டு அவையில் இருந்த எல்லாரும் திகைத்தனர்.

"உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை. நாயை மண்டையில் அடித்துக் கொன்றால் அவனையும் அப்படியே கொல்வார். வயிற்றில் வாளைச் செருகினால் அவன் வயிற்றிலும் வாளைச் சொருகுவர். பாவம் அவன்" என்று நினைத்தனர்.

ஆனால், மகிழன் அமைதியாக இருந்தான்.

"விகடகவியே! நீ உயிர் பிழைக்க எந்த வாய்ப்பும் இல்லை. இந்த நாயைக் கொல்ல எந்தப் படைக் கருவியைப் பயன்படுத்தப் போகிறாய்? வாளா? ஈட்டியா? அம்பா?" என்று கேட்டார். அவர் முகத்தில் புன்முறுவல் தெரிந்தது.

எல்லாரும் பதைபதைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாயின் அருகே சென்றான் அவன் இரக்கத்துடன் அதை பார்த்தான்.

"நாயே! என்னை மன்னித்து விடு. எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்றான்.

அவன் அதை எப்படிக் கொல்லப் போகிறான் என்பதை எல்லாரும் ஆர்வமாகப் பார்த்தனர்.

அந்த நாயின் வாலைத் தன் இரண்டு கைகளாலும் பிடித்துத் தூக்கினான். தலைக்கு மேல் அதைச் சுழற்றினான். அப்படியே அதைத் தூக்கி எறிந்தான்.

சுவரில் வேகமாக மோதிய அது அப்படியே இறந்து விழுந்தது.

"அரசே! நீங்கள் சொன்னது போல இந்த நாயைக் கொன்று விட்டேன். அதே முறையில் நீங்கள் என்னைக் கொல்லலாம்" என்றான்.

